சிகரத்தின்

# தினத்தென்றல்

SIGARATTHIN DHINATHENDRAL
தமிழ் சமுதாயத்தின் குரல்
TAMIL DAILY Rs. 4

Vol:13 • Issue:356 16.10.2026 • வெள்ளிக்கிழமை • சென்னை • கோவை • திருச்சி • திருநெல்வேலி • பக்கம் 8 • விலை ரூ.4



**கோவையில் பெரியார் நூலகத்தை இன்று முதல்வர் திறந்து வைக்கிறார்**

**சீனா-அமெரிக்காவை முந்தும் இந்தியா**

**400 ஏழைக் குடும்பங்களுக்கு உதவிக்கரம் நீட்டிய ராஷ்மிகா மந்தனா!**












## தமிழ்நாடு, புதுச்சேரி, ஆந்திர கடலோரப் பகுதிகள், ராயலசீமா, கர்நாடகத்தின் தெற்கு உள்பகுதியில்

# வடகிழக்கு பருவமழை தொடங்கியது..!

**சென்னை, அக்.16:** தமிழ்நாடு, கேரளம், புதுவையில் வடகிழக்கு பருவமழை தொடங்கியதாக இந்திய வானிலை ஆய்வு மையம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

சென்னை உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் கடந்த ஒரு மாதமாக வாட்டி வதைத்த வெய்யிலால் மக்கள் செய்வதறியாது தவித்து வந்தனர்.

இந்த நிலையில், சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் மாலை பரவலாக மழை பெய்திருந்த நிலையில், இன்றும் பல இடங்களில் காலை முதலே வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது.

இதனிடையே, முற்பகல் 11.30 மணிக்கு சென்னையில் அம்பத்தூர், அம்பத்தூர் தொழிற்பேட்டை, மதுரவாயல், வளசரவாக்கம், வானகரம், நெற்குன்றம், போரூர், ஐயப்பன்தாங்கல் உள்ளிட்ட இடங்களில் சுமார் அரை மணிநேரம் கனமழை கொட்டித் தீர்த்தது.

இந்த நிலையில், தென்மேற்கு பருவமழை முழுமையாக விலகி, தமிழ்நாடு, புதுச்சேரி, ஆந்திர கடலோரப் பகுதிகள், ராயலசீமா, கர்நாடகத்தின் தெற்கு உள்பகுதியில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ளதாக இந்திய வானிலை மையம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இன்னும் சில நாள்களில் தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;



**வானிலை முன்னறிவிப்பு மற்றும் எச்சரிக்கை:**

சுமார் 1.5 கிமீ உயரம் வரை தெற்கு கடலோர தமிழக பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. சுமார் 1.5 கிமீ உயரம் வரை தெற்கு கடலோர தமிழக பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சியிலிருந்து ஒடிசா கடலோர பகுதிகளுக்கு அப்பால் உள்ள வடமேற்கு வங்கக்கடல் பகுதிகள் வரை, மத்தியமேற்கு மற்றும் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள் வழியாக ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை (TROUGH) நிலவுகிறது.

15-10-2026: நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, ஈரோடு, திருப்பூர், சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கன முதல் மிக கன மழை பெய்யக்கூடும்.

மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், கடலூர், தென்காசி, கன்னியாகுமரி, கள்ளக்குறிச்சி, திருச்சிராப்பள்ளி, கரூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ராமநாதபுரம், ராணிப்பேட்டை, சிவகங்கை, திருநெல்வேலி, திண்டுக்கல் மாவட்டங்களில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கன மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் அநேக இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

16-10-2026: நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, திண்டுக்கல், தென்காசி மற்றும் மதுரை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கன முதல் மிக கன மழை பெய்யக்கூடும்.

ஈரோடு, திருப்பூர், விருதுநகர், கன்னியாகுமரி, ராமநாதபுரம், சிவகங்கை, கரூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், புதுக்கோட்டை, ராணிப்பேட்டை, கடலூர், திருவள்ளூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் ஒரிரு

### இந்திய வானிலை மையம் அறிவிப்பு

இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கன மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் அநேக இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

17-10-2026: நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, திண்டுக்கல், மதுரை, திருப்பூர், சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், வேலூர், ராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், கடலூர், ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், ராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, நாமக்கல் மாவட்டங்களில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கன மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் அநேக இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

18-10-2026: நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கன மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

19-10-2026: நீலகிரி, கோயம்புத்தூர், திருவண்ணாமலை, நாமக்கல், திருப்பூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கன மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டில் முழுநேர ஆளுநராக நியமிக்கப்பட்ட

# அர்லேகருடன்-முதல்வர் விஜய் சந்திப்பு



**சென்னை, அக்.16:** தமிழ்நாட்டின் கவர்னராக இருந்த ஆர்.என்.ரவி கடந்த மார்ச் மாதம் 5-ந்தேதி மேற்கு வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டார். அவருக்கு பதிலாக தமிழ்நாட்டுக்கு புதிய கவர்னர் நியமிக்கப்படவில்லை.

மாறாக கேரள மாநில கவர்னர் ஆர்.வி.அர்லேகர் தமிழ்நாட்டின் பொறுப்பு கவர்னராக நியமனம் செய்யப்பட்டார். இவர்தான் முதல்-அமைச்சர் விஜய்க்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டுக்கு கடந்த 6 மாதங்களுக்கும் மேலாக முழுநேர கவர்னர் நியமிக்கப்படவில்லை.

இதற்கிடையே கடந்த ஆகஸ்டு மாதம் ஆந்திர மாநில முன்னாள் முதல்-மந்திரி கிரண் ரெட்டி தமிழகத்துக்கு கவர்னராக நியமிக்கப்பட இருப்பதாக பேசப்பட்டது. அப்போது பிரதமர் வெளிநாட்டு பயணத்தில் இருந்தார். அவர் வந்த பிறகு இது பற்றிய அறிவிப்பு வெளியாகலாம் என கூறப்பட்டது. ஆனால் அதற்கான அறிவிப்பு ஏதும் வெளியாகவில்லை.

இந்த நிலையில் தமிழ்நாடு உள்பட 6 மாநிலங்களுக்கு புதிய கவர்னர்களை நியமித்து ஜனாதிபதி திரவுபதி உத்தரவு பிறப்பித்திருந்தார். இந்த உத்தரவின் படி தமிழ்நாட்டுக்கு கேரள கவர்னர் ஆர்.வி.அர்லேகரே புதிய கவர்னராக, அதாவது முழு நேர கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளார். பிரதமர் மோடி சில தினங்களுக்கு முன்னர் ஒருநாள் பயணமாக தமிழகம் வந்திருந்தார். அதன்பின்னர் இந்த அதிரடி மாற்றம் நடந்திருந்தது.

**முதல்வர் விஜய் வாழ்த்து**

கவர்னர் அர்லேகருக்கு முதல்-அமைச்சர் விஜய் சமூக வலைத்தளம் மூலம் வாழ்த்து தெரிவித்தார். இதனிடையே, தமிழகத்தின் முழு நேர கவர்னராக அர்லேகர் இன்று பொறுப்பேற்றுக்கொண்டார். இந்த நிலையில், தமிழகத்தின் முழுநேர கவர்னராக பொறுப்பேற்றுள்ள அர்லேகரை முதல்-அமைச்சர் விஜய் சந்தித்துள்ளார். இதற்காக கிண்டி மக்கள் பவனுக்கு வந்த அவர், கவர்னர் அர்லேகரை சந்தித்து பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தார்.

## ஞானேஷ் குமார், சாந்து, ஜோஷிக்கும்

# தேர்தல் ஆணையத்துக்கும் உச்ச நீதிமன்றம் நோட்டீஸ்: எஸ்ஐஆருக்கு எதிரான ராகுல் மனு மீது உத்தரவு







**புதுடில்லி, அக்.16:** வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் விவகாரத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, அகிலேஷ் யாதவ், தேஜஸ்வி யாதவ் உள்ளிட்டோர் தாக்கல் செய்த மனு தொடர்பாக விளக்கம் கோரி இந்திய தேர்தல் ஆணையத்துக்கு உச்ச நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) விவகாரத்தில் முறைகேடு நடந்துள்ளதாகக் குற்றம் சாட்டி தொடர் போராட்டங்களை இண்டியா கூட்டணி முன்னெடுத்து வருகிறது.

இந்த விவகாரத்தில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரின் செயல்பாடுகளுக்கு, தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சாந்து, விவேக் ஜோஷி ஆகியோர் தங்கள் எதிர்ப்பை எழுத்துப்பூர்வமாக பதிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

எனவே, எஸ்ஐஆர் முறைகேடுகளுக்குப் பொறுப்பேற்று ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் என்று இண்டியா கூட்டணி வலியுறுத்தி வருகிறது.

இந்த கோரிக்கையை வலியுறுத்தி கடந்த 12-ம் தேதி உச்ச நீதிமன்றத்தை நோக்கி பேரணி நடத்தப்பட்டது. இதில், ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி, திரிணமூல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி, சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ், ராஷ்டிரிய ஜனதா தள மூத்த தலைவர் தேஜஸ்வி யாதவ், தேசியவாத காங்கிரஸ் (சரத் பவார்) மூத்த தலைவர் சுப்ரியா சுலே உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பின்னர், எஸ்ஐஆர் நடைமுறைக்கு எதிராக மனு தாக்கல் செய்யப்பட்டது. ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கே, திரிணமூல் காங்கிரஸ் மூத்த தலைவர் சவுகதா ராய், அகிலேஷ் யாதவ், தேஜஸ்வி யாதவ், சிவசேனா (உத்தவ் தாக்கரே) மூத்த தலைவர் சஞ்சய் ராத், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் எம்.ஏ. பேபி, இந்திய கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் டி.ராஜா, ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா மூத்த தலைவர் மஹுவா மாஜி, தேசியவாத காங்கிரஸ் (சரத் பவார்) மூத்த தலைவர் சுப்ரியா சுலே, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மூத்த தலைவர் முகமது பஷீர் உள்ளிட்ட 13 பேர் மனுதாரர்களாக சேர்க்கப்பட்டனர்.

எதிர்மனுதாரர்களாக தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சாந்து, விவேக் ஜோஷி ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டன.

மனுவில், எஸ்ஐஆர் தொடர்பாக தேர்தல் ஆணையம் எடுத்த முடிவுகள் மற்றும் அதை செயல்படுத்திய விதம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் பொது அரங்கில் வெளியிட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

இந்த மனு, தலைமை நீதிபதி சூரியகாந்த் தலைமையிலான அமர்வு முன் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, அடுத்த விசாரணையின்போது மனுதாரர்களில் ஒருவரிடம் அவரது நடத்தை தொடர்பாக கேள்வி எழுப்ப விரும்புகிறோம் என சூர்யகாந்த் தெரிவித்தார்.

மேலும், இந்த மனு தொடர்பாக பதில் அளிக்க இந்திய தேர்தல் ஆணையம், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், தேர்தல் ஆணையர்கள் சுக்பீர் சிங் சாந்து, விவேக் ஜோஷி ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்ப நீதிமன்றம் உத்தரவிட்டது.

சிகரத்தின்
தினத்தென்றல்

ரூ.3,108 கோடியில்

# சென்னை சுற்றுக் குழாய் திட்டம்: முதல்வர் விஜய் அடிக்கல்!



**சென்னை, அக்.16:** சென்னை சுற்றுக் குழாய் திட்டத்துக்கு முதல்வர் சி. ஜோசப் விஜய் (அக். 14) அடிக்கல் நாட்டினார்.

இதன்மூலம் சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளான பூண்டி, புழல், சோழவரம், செம்பரம்பாக்கம் மற்றும் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள் உள்பட 9 குடிநீர் ஆதாரங்கள் 98 கி.மீ. தொலைவுக்கு இரும்புக் குழாய்கள் மூலம் இணைக்கப்பட உள்ளன.

தற்போது, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் சென்னையில் உள்ள 85.7 லட்சம் குடும்பங்களுக்கு தினமும் 1,200 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு நிலையத்தில் இருந்தும் குடிநீர் விநியோகம் நகரின் பல்வேறு பகுதிகளுக்கு தனித்தனியாகவடிவமைக்கப்பட்ட பிரதான குழாய்கள் மூலம் விநியோகிக்கப்படுகிறது.

இக்கட்டான காலங்களில் ஒரு பகுதியின் ஆதாரங்களிலிருந்து, பற்றாக்குறை உள்ள மற்றொரு ஆதாரத்துக்கு உபரிநீரை மாற்ற முடியாது. எனவே, தற்போதுள்ள குடிநீர் கட்டமைப்பில் உள்ள குறைகளைக் களையும் வகையில், பெருநகர சென்னையில் பிரதான சுற்றுக் குழாய் திட்டத்தைச் செயல்படுத்த முந்தைய திமுக ஆட்சியில் திட்டமிடப்பட்டு, இதற்காக ரூ.3,108.55 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டது.

இந்த நிலையில், சென்னைக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யும் வகையில் ரூ. 3,108.55 கோடியில் சுற்றுக் குழாய் திட்டத்துக்கு, முதல்வர் ஜோசப் விஜய் சோழிங்கநல்லூரில் அடிக்கல் நாட்டினார்.

மெட்ரோ பணிகள் நடைபெறும் இடங்களில்

# பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை தீவிரம்



**சென்னை, அக்.16:** பருவமழையால் பாதிப்பு ஏற்படாத வகையில், மெட்ரோ திட்டப்பணிகள் நடைபெறும் இடங்களில் தேவையான முன்னெச்சரிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: வரவிருக்கும் பருவமழை காலத்தை எதிர்கொள்வதற்காக, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், பெருநகர சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத்துறை மற்றும் தமிழக சாலை மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து தீவிர முன்னெச்சரிக்கை பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில் அனைத்து வழித்தடங்களிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மில்லர்ஸ் சாலை, ஸ்டெர்லிங் சாலை, ஆண்டர்சன் சாலை, ஆற்காடு சாலை (போரூர் சந்திப்பு), சாஸ்திரி நகர், வில்லிவாக்கம், பெரம்பூர் (டேங்க் லிங்க் சாலை), மவுண்ட் பூந்தமல்லி சாலை மற்றும் இந்திரா நகர் உள்ளிட்ட மெட்ரோ திட்டத்தின் மூன்று வழித்தடங்களிலும், வெள்ளப் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாகக் கண்டறியப்பட்ட இடங்களில் போதுமான திறன் கொண்ட நீர் இறைக்கும் பம்புகள் நிறுத்தப்பட்டுள்ளன.

ஒக்கியம் மடுவு பகுதியில் உள்ள ஒட்டுமொத்த 98 மீட்டர் நீளப் பகுதியும் முழுமையாகச் சுத்தம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மழைநீர் எவ்வித தடையுமின்றி சீராக வெளியேறுவது உறுதி செய்யப்பட்டு, அப்பகுதியில் வெள்ள பாதிப்புகள் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## க்ரைம் கார்னர்

CRIME SCENE DO NOT CROSS

### இளைஞரை மிரட்டி ஆட்டோவில் கடத்தி பணம், செல்போன் பறிப்பு




**சென்னை, அக்.16:** திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த அஜய் (21), சென்னை துரைப்பாக்கத்தில் உள்ள தனியார் விடுதியில் தங்கியிருந்து, அங்குள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார்.

சொந்த ஊருக்குச் சென்றுவிட்டு, கடந்த 13-ம் தேதி இரவு சென்னைக்குத் திரும்பியுள்ளார். பள்ளிக்கரணை ரேடியல் சாலையில் பைக்கில் சென்றபோது, ஆட்டோவில் வந்த 3 பேர் அவரை வழிமறித்துக்கத்தியைக் காட்டி மிரட்டி பணம் கேட்டுள்ளனர். அஜய் ரொக்கப் பணம் இல்லை எனக் கூறியதால், அவரைத் தாக்கி ஆட்டோவில் கடத்திச் சென்றனர்.

பின்னர் அவரது வங்கிக் கணக்கில் உள்ள பணத்தை எடுத்துக் கொடுக்குமாறு அந்தக் கும்பல் மிரட்டியுள்ளது. அஜய்யின் வங்கிக் கணக்கில் போதிய பணம் இல்லாததால், கடன் வழங்கும் செயலி மூலம் கடன் பெறச் செய்ததாகக் கூறப்படுகிறது.

பின்னர் அந்தத் தொகையிலிருந்து ரூ.9,500-ஐ மற்றொருவரின் வங்கிக் கணக்குக்கு அனுப்பி, ஏடிஎம் அட்டை மூலம் பணத்தை எடுத்துள்ளனர். பின்னர் அஜய்யின் செல்போனையும் பறித்துக்கொண்ட கும்பல், அவரை மீண்டும் ஆட்டோவில் அழைத்துவந்து பள்ளிக்கரணை ரேடியல் சாலையில் இறக்கிவிட்டுள்ளது. அவரது பைக்கையும் ஒப்படைத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளது. புகாரின் பேரில், பள்ளிக்கரணை போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். சம்பவம் நடைபெற்ற பகுதிகளில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை ஆய்வு செய்து, குற்றவாளிகளை அடையாளம் காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஆண்டிபட்டி இரவில் வெளிச்சம் காட்டாத

# ஹைமாஸ் விளக்கால் விபத்து: பேரூராட்சி கண்டு கொள்ளாதது ஏனோ?

**தேனி, அக்.16:** தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வைகை அணை சாலை எம். ஜி. ஆர். சிலை அருகே உள்ள ஹைமாஸ் விளக்கு கடந்த 1. வாரத்திற்கு மேலாக பெயருக்கு ஒரு லைட் மட்டும் மின் மினி பூச்சி போல் தெரிகிறது . இது ஒரு முக்கிய நான்கு வழி சந்திப்பு ஆகும். இதன் வழியாக தான் ஆம்னி பஸ்கள் சென்னை செல்கிறது.

இது போக பெரியகுளம் செல்லும் பஸ்கள் போய் வந்து கொண்டு இருக்கின்றன. ஆட்டோக்களும் சென்று வருகின்றன. டாஸ்மாக் பாரும் உள்ளன. போதை ஆசாமிகளும் அவ்வழியாக வருவார்கள்.இப்படி இருந்தால் விபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளன. ஆகவே, பேரூராட்சி நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுத்திட இப் பகுதியினர் கோரி வருகின்றனர்.




மணிப்பூரில் தடை செய்யப்பட்ட

# பயங்கரவாத அமைப்பை சேர்ந்த 2 பேர் கைது!

**இம்பால், அக்.16:** மணிப்பூரில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பை சேர்ந்த 2 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

மணிப்பூரில் கடந்த 2023ம் ஆண்டு மே 3-ந்தேதி குகி மற்றும் மெய்தி இனங்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல், வன்முறையாக உருமாறியது. இதில், 60-க்கும் மேற்பட்டோர் ஒரு சில மாதங்களில் கொல்லப்பட்டனர். தொடர்ந்து, மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சி அமல்படுத்தப்பட்டது.

ராணுவம் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இதன்பின்னர், அமலில் இருந்த ஜனாதிபதி ஆட்சி கடந்த ஆண்டு விலக்கிக்கொள்ளப்பட்டது. ஒய்.கே. சிங் முதல்-மந்திரியாக பதவியேற்றார்.



எனினும், 3 ஆண்டுகளாக தொடர்ந்து நடந்து வந்த வன்முறையால் இதுவரை 306 பேர் பலியாகி உள்ளனர். இதனை சட்டசபையில் அரசு உறுதிப்படுத்தியது.

வன்முறையால் பாதிக்கப்பட்ட மணிப்பூரில் பயங்கரவாதிகள், ஆயுதக்குழுக்களுக்கு எதிரான நடவடிக்கையை பாதுகாப்பு படையினர் தீவிரப்படுத்தி வருகின்றனர். அந்த வகையில் இம்பால் மேற்கு மாவட்டத்தில் 39 வயது நபர் ஒருவரை நேற்று முன்தினம் பாதுகாப்பு படையினர் கைது செய்தனர்.

இதேபோன்று பிஷ்னுபூர் மாவட்டத்தின் குவக்டா பகுதியை சேர்ந்தவரான 60 வயது நபர் ஒருவரும் சிக்கினார். கைது செய்யப்பட்ட இருவரும் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளை சேர்ந்தவர்கள் என்று போலீசார் தெரிவித்தனர்.

இதில் 39 வயது நபர் பிங்குமணி சிங் என அடையாளம் காணப்பட்டார். 60 வயது நபர் முகமது அப்துல் ஹகீம் என தெரிய வந்துள்ளது. அவர்கள் மிரட்டி பணம் பறிக்கும் செயலில் ஈடுபட்டு வந்துள்ளனர். இதனை தொடர்ந்து, தேடுதல் மற்றும் பாதுகாப்பு பணியை படையினர் தீவிரப்படுத்தி உள்ளனர்.

ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில்

# தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் வ.சிவகிருஷ்ணமூர்த்தி நேரில் ஆய்வு

**தேனி, அக்.16:** தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம், பிச்சம்பட்டி ஊராட்சியில் ரூ.5.90 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டட கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு, உரிய காலத்திற்குள் பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவருமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், தற்பொழுது தற்காலிகக் கட்டடங்களில் செயல்பட்டுவரும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டு, அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் விவரம் குறித்து கேட்டறிந்ததுடன், பதிவேடுகளை முறையாகப் பராமரித்து, நடைபெற்றுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை உரிய காலத்திற்குள் முடிப்பதற்கு தேவையான நடவடிக்ககைளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.



அதனைத்தொடர்ந்து, ஆண்டிபட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அங்கு பயின்றுவரும் மாணவர்களின் எண்ணிக்கை குறித்து கேட்டறிந்ததுடன், 10 மற்றும் 12-ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வுகளில் மாணவர்கள் 100 சதவீதம் தேர்ச்சி பெறுவதற்கான நடவடிக்ககைளை மேற்கொள்ள வேண்டும் என ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத்திட்டம் மற்றும் புரட்சித்தலைவர் எம். ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் ஆகிய திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்து, அங்குப்பயிலும் மாணவர்களுடன் கலந்துரையாடி அனைவரும் நன்றாகப் படித்து அதிகப்படியான மதிப்பெண்கள் பெற்று, தொடர்ந்து உயர்கல்வி பயின்று வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

பின்னர், ஆண்டிபட்டி கூட்டுறவு பண்டகசாலை நியாய விலைக்கடையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அத்தியாவசியப் பொருட்களின் தரம் மற்றும் இருப்பு குறித்து பார்வையிட்டு, குடும்ப அட்டைதாரர்களின்எண்ணிக்கை விவரம் குறித்து பணியாளர்களிடம் கேட்டறிந்தார்.

மேலும், பாலக்கோம்பை ஊராட்சி மன்ற அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, அங்கு பராமரிக்கப்பட்டுவரும் ரொக்கப்பதிவேடு, வரி இனங்கள் பதிவேடு உள்ளிட்டப் பதிவேடுகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் முறையாக குளோரினேசன் செய்து விநியோகம் செய்ய வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வில், செயற்பொறியாளர் (வளர்ச்சி) திருமதி மீனாகுமாரி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராகவன், பாலகிருஷ்ணன், மாவட்ட கல்வி அலுவலர் சுருளிவேல், தலைமையாசிரியர் செந்தில்குமரன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்

1,000 ஏசி மின் பேருந்து கொள்முதல்

# டெண்டர் ரத்து: மாநகர போக்குவரத்து கழகம் அறிவிப்பு

**சென்னை, அக்.16:** ஆயிரம் ஏசி மின் பேருந்துகள் கொள்முதலுக்கான டெண்டர் ரத்து செய்யப்பட்டுள்ளதாக மாநகர போக்குவரத்து கழகம் தெரிவித்துள்ளது.

சென்னை மாநகர போக்குவரத்து கழகம் சுற்றுச்சூழல் பாதிப்புகளை குறைக்கும் நோக்கில் மின்சார பேருந்துகளை இயக்கி வருகிறது. தற்போது 310 ஏசி மின்சார பேருந்துகளும், 400 ஏசி வசதி இல்லாத பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன.



இந்த மின்சார பேருந்துகள் ஒப்பந்த அடிப்படையில் இயக்கப்பட்டு வருகிறது. ஒப்பந்தப்படி பேருந்துகளை தனியார் நிறுவனம் இயக்கும், அதற்கான தொகையை போக்குவரத்து கழகம் வழங்கும்.

அதன்படி, ஒரு பேருந்து தினமும் 200 கி.மீ. இயக்க வேண்டும், மாநகர போக்குவரத்து கழகம் ஏசி பேருந்துகளுக்கு ஒரு கி.மீ.க்கு ரூ.80.82-ம், ஏசி இல்லாத பேருந்துகளுக்கு ஒரு கி.மீ.க்கு ரூ.77.12-ம் வழங்குகிறது.

இதனிடையே கடந்த மார்ச் மாதம் ஆயிரம் 12 மீட்டர் தாழ்தள மின் பேருந்துகளை கொள்முதல் செய்ய டெண்டர் கோரியது. இந்த டெண்டரில் அதிக நிறுவனங்கள் பங்கேற்காததால் பலமுறை டெண்டர் திறப்பு ஒத்திவைக்கப்பட்டது.

இதனிடையே டெண்டர் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்ட நிலையில் டெண்டர் ரத்து செய்யப்பட்டுள்ளது. டெண்டரில் அதிக நிறு வனங்கள் பங்கேற்காததே காரணம் என அதிகாரிகள் கூறினர்.

# திருச்செந்தூரில் கனமழை: சிவன் கோயிலுக்குள் வெள்ளம் புகுந்தது

**தூத்துக்குடி, அக்.16:** திருச்செந்தூர், அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நேற்று அதிகாலை 4 மணி முதல் 7 மணி வரை 3 மணி நேரம் கனமழை பெய்தது.

இதனால், தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கியது. திருச்செந்தூர் டி.பி.சாலையில் உள்ள 2 அரசு பள்ளிகளின் வளாகம் மற்றும் கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு மழை நீர் தேங்கி குளம் போல் காட்சியளிக்கிறது.

திருச்செந்தூர் சிவன் கோயில் முதல் பிரகாரத்தில் மழைநீர் புகுந்து தேங்கி நின்றது. சுப்பிரமணிய சுவாமி கோயில் செல்லும் சாலையில் மழை நீருடன் பாதாள சாக்கடை கழிவுநீர் கலந்து ஓடியதால் துர்நாற்றம் வீசியது. இதனால் பக்தர்கள் சிரமம் அடைந்தனர். மேலும், திருச்செந்தூரை சுற்றியுள்ள கிராமப்புறங்களில் 3 மணி நேரத்துக்கு மேலாக மின்தடை ஏற்பட்டது.

2 பெண்கள் உயிரிழப்பு: இளையான்குடி அருகே மின்னல் பாய்ந்து விவசாயப் பணி செய்து கொண்டிருந்த 2 பெண்கள் உயிரிழந்தனர்.

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி அருகே திருவள்ளூரில் விவசாய நிலத்தில் அப்பகுதியைச் சேர்ந்த ஆரோக்கியசாமி மனைவி சவுரியம்மாள் (46), அழகன் மனைவி பெரியகருப்பி (65) ஆகியோர் வேலை செய்து கொண்டிருந்தனர்.

நேற்று பிற்பகல் அப்பகுதியில் பலத்த மழை பெய்தது. அப்போது மின்னல் பாய்ந்ததில் சவுரியம்மாள், பெரியகருப்பி ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இதுகுறித்து இளையான்குடி போலீஸார் விசாரிக்கின்றனர்.

## முதல்வர் விஜய் மளிகைக் கடையில்
# விலைவாசியை கேட்டறிய வேண்டும்: மு.க.ஸ்டாலின்



**சென்னை, அக்.16:** "தமிழக முதல்வர் விஜய் லண்டன் போகிறார், கர்நாடகா போகிறார், ஆந்திரா போகிறார். போகட்டும். அப்படியே உள்ளூரில் உள்ள மளிகைக் கடைக்கும் ஒரு எட்டு போய், விலைவாசி உயர்வைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்." என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

இது தொடர்பாக மு.க.ஸ்டாலின் தனது சமூகவலைதளப் பக்கத்தில், "முதல்வர் லண்டன் போகிறார், கர்நாடகா போகிறார், ஆந்திரா போகிறார். போகட்டும். அப்படியே உள்ளூரில் உள்ள மளிகைக் கடைக்கும் ஒரு எட்டு போய், விலைவாசி உயர்வைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

தயவுசெய்து, உணவுத்துறை அமைச்சரிடம் கேட்டுவிட வேண்டாம். அவர் எல்லாம் 'நார்மலாக' இருக்கிறது என்பார்.

மக்கள் பண்டிகைக் காலத்தின் மகிழ்ச்சிக்குப் பதிலாக, பயத்தில் உறைந்துபோய் இருக்கிறார்கள். அவர்களிடம் கேளுங்கள்" என்று பதிவிட்டுள்ளார்.

### விண்ணை முட்டும் விலைவாசி உயர்வு:

கடந்த ஜூலை மாதம் முதல் இப்போது வரையிலான 3 மாதங்களில் அரிசி விலை கிலோவுக்கு ரூ.27 வரையிலும், 26 கிலோ மூட்டை ரூ.700 வரையிலும் உயர்ந்திருக்கிறது.

தமிழகத்தில் கடந்த ஜூலை மாதம் ரூ.1,100 ஆக இருந்த 26 கிலோ எடை கொண்ட சாதாரண ரக புழுங்கல் அரிசி மூட்டை விலை இப்போது ரூ.1,800 ஆக உயர்ந்திருக்கிறது. அதாவது இந்த வகை அரிசியின் விலை கிலோ ரூ.42-லிருந்து ரூ.70 ஆக அதிகரித்திருக்கிறது.

பொன்னி புழுங்கல் அரிசி மூட்டை விலை ரூ.1,400-லிருந்து ரூ.1,900 ஆகவும், ஆந்திரா மற்றும் கர்நாடகத்திலிருந்து வரும் சோனா மசூரி அரிசி மூட்டை விலை ரூ.1,400-லிருந்து ரூ.2,000 ஆகவும் அதிகரித்திருக்கிறது.

சில்லறை விலையில் ஒரு கிலோ அரிசி ரூ.27 வரையிலும், துவரம் பருப்பு கிலோவுக்கு ரூ.6, உளுத்தம் பருப்பு ரூ.11 வீதமும் உயர்ந்துள்ள நிலையில், அதனால் ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், "அரிசி உள்ளிட்ட 11 அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை கண்காணித்து வருகிறோம்; அரிசி விலை உயரவே இல்லை; இது எதிர்க்கட்சிகளால் கட்டமைக்கப்படும் பொய்யான பிம்பம் தான் என்று உணவுத்துறை அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இந்தச் சூழலில், எகிறும் விலைவாசியால் மக்கள் பண்டிகைக் காலத்தின் மகிழ்ச்சிக்குப் பதிலாக, பயத்தில் உறைந்துபோய் இருக்கிறார்கள் என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் விமர்சித்துள்ளார்.

## ஜிஎஸ்டி சீர்திருத்தங்களை
# திறம்பட செயல்படுத்த வேண்டும்: சிபிஐசி தலைவர் அறிவுறுத்தல்




**சென்னை, அக்.16:** ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் மற்றும் 57-வது ஜிஎஸ்டி கவுன்சிலின் பரிந்துரைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியத்தின் (சிபிஐசி) தலைவர் விவேக் சதுர்வேதி தலைமை தாங்கினார். இதில், சிபிஐசி உறுப்பினர் (ஜிஎஸ்டி) சஞ்சய் மங்கல், தமிழக அரசின் வணிக வரிகள் ஆணையர் எஸ். நாகராஜன், சென்னை ஜிஎஸ்டி மண்டலத்தின் தலைமை ஆணையர் எஸ்.கே. விமலாநாதன் மற்றும் வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகள், சிபிஐசி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டம் இரண்டு அமர்வுகளாக நடைபெற்றது. காலையில் நடைபெற்ற முதல் அமர்வில், ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் மற்றும் 57-வது ஜிஎஸ்டி கவுன்சிலின் பரிந்துரைகள் குறித்து வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் நடந்தது. அப்போது, பிரதிநிதிகள் எழுப்பிய பல்வேறு கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு அதிகாரிகள் விளக்கம் அளித்தனர்.

மேலும், மத்திய அரசு மேற்கொண்டு வரும் ஜிஎஸ்டி சீர்திருத்தங்களுக்குப் பாராட்டுத் தெரிவித்த வர்த்தகப் பிரதிநிதிகள், வர்த்தகத்தை எளிதாக்கவும், தொழில் நடைமுறைகளை மேம்படுத்தவும் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை வரவேற்றனர்.

இதைத் தொடர்ந்து, மதியம் நடைபெற்ற இரண்டாவது அமர்வில் சிபிஐசி அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. அப்போது பேசிய சிபிஐசி தலைவர் விவேக் சதுர்வேதி, அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஜிஎஸ்டி சீர்திருத்தங்களை சீராகவும் திறமையாகவும் தடையின்றியும் செயல்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

அதே நேரத்தில், அரசின் வருவாயைப் பாதுகாப்பதுடன், வர்த்தக நடவடிக்கைகளை எளிதாக்குவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தருவதும் முக்கியம் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

## அரசுப் பள்ளி மாணவர்களின் கற்றலை மேம்படுத்த
# 'திறன் ப்ளஸ்' திட்டம்: அக். 21 முதல் அடிப்படை மதிப்பீட்டுத் தேர்வு



**சென்னை, அக்.16:** தமிழகத்தில் அரசுப்பள்ளி மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்த 'திறன் ப்ளஸ்' திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான அடிப்படை மதிப்பீட்டுத் தேர்வுகள் அக். 21 முதல் 23-ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் 6 முதல் 9-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் மொழிப் பாடம் மற்றும் கணித திறனை மேம்படுத்தும் விதமாக திறன் இயக்கம் கடந்தாண்டு அமல்படுத்தப் பட்டது.

இதற்கு பரவலாக வரவேற்பு கிடைத்ததால் தற்போது 2-ம் வகுப்பு முதல் 9-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு திறன் ப்ளஸ் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

இதுகுறித்து பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் என் .லதா மற்றும் தொடக்கக் கல்வித் துறை இயக்குநர் பூ.ஆ.நரேஷ் ஆகியோர் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

இந்தத் திட்டத்தின்கீழ் மொழிப் பாடத்திறன் மற்றும் கணிதத் திறனில் குறைபாடுள்ள மாணவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

இதற்காக மாணவர்களின் கற்றல் நிலையை அறியும் அடிப்படை மதிப்பீட்டுத் தேர்வுகள் (Baseline Assessment) அக்டோபர் 21 முதல் 23-ம் தேதி வரை நடைபெறும். இந்த தேர்வானது 40 நிமிடங்கள் வரை நடைபெறும். மொத்தம் 10 வினாக்கள் இடம்பெற்றிருக்கும்.

இந்த தேர்வின் மூலம் எழுத்துகள், சொற்களை கண்டறிவதில் சிரமம் உள்ளவர்கள், வாசித்தல் மற்றும் எழுதுவதில் சிரமம் உள்ளவர்கள், எண்களை எழுதுவதிலும், வாய்ப்பாடுகள் கூறுவதிலும் சிரமப்படுபவர்கள், கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் போன்ற அடிப்படைச் செயல்பாடுகளில் பின்தங்கியவர்கள் கண்டறியப்படுவார்கள்.

தேர்வுக்கான வினாத்தாள்கள் https://exam.tnschools.gov.in என்ற இணையதளத்தில் முன்கூட்டியே பதிவேற்றம் செய்யப்படும். தேர்வுக்கு முந்தைய நாள் பள்ளிகள் இதை பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும்.

தேர்வு முடிந்தவுடன் வகுப்பு ஆசிரியர்கள் விடைத்தாள்களைத் திருத்தி மதிப்பெண்களை அக்.31-க்குள் எமிஸ் தளத்தில் பதிவேற்ற வேண்டும்.

அதன் பின் தேர்வாகும் மாணவர்களின் பட்டியலை ஆசிரியர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கீழ்ப்பாக்கம், ஸ்டான்லி மருத்துவ கல்லூரிகளில் எம்பிபிஎஸ் முதல் ஆண்டு மாணவர்களுக்கு வரவேற்பு

**சென்னை, அக்.16:** சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியில் 69-வது இளநிலை மருத்துவ மாணவர் சேர்க்கை வரவேற்பு நேற்று நடந்தது.

இந்த நிகழ்வில் பங்கேற்ற சுகாதாரத்துறை அமைச்சர் அருண்ராஜ், பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி - விளம்பரத்துறை அமைச்சர் ராஜ்மோகன் ஆகியோர் 2026 - 27-ம் ஆண்டில் இளநிலை மருத்துவ படிப்பில் சேர்ந்துள்ள 139 மாணவர்களுக்கு வெள்ளை அங்கி மற்றும் ஸ்டெதஸ்கோப் அணிவித்து வரவேற்றனர்.

தொடர்ந்து, மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியின் சார்பில் நடைபெற்ற இளஞ்சிவப்பு அக்டோபர் எனும் விழிப்புணர்வு பேரணியை அமைச்சர்கள் தொடங்கி வைத்து, பேரணியில் கலந்து கொண்டனர்.

முன்னதாக, சென்னை ராயபுரத்தில் உள்ள ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற 89-வது மருத்துவ இளநிலை மாணவர் சேர்க்கை வரவேற்பு நிகழ்வில் சுகாதாரத்துறை அமைச்சர் அருண்ராஜ், நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை அமைச்சர் மரியவில்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

2026- 27-ம் ஆண்டில் இளநிலை மருத்துவ படிப்புகளில் சேர்ந்துள்ள 237 மாணவர்களுக்கு வெள்ளை அங்கி மற்றும் ஸ்டெதஸ்கோப் அணிவித்து வரவேற்று, ரூ.10 லட்சத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கான பகல்நேர விடுதியை அமைச்சர்கள் திறந்து வைத்தனர்.

மருத்துவ நெறிமுறைகள் சார்ந்த உறுதிமொழியை அமைச்சர்கள் முன்னிலையில் மாணவர்கள் ஏற்றுக்கொண்டனர். கல்லூரி டீன் ஏ. அரவிந்த், துணை முதல்வர் ஆர்.சத்தியலட்சுமி, உள்ளிட்டோர் நிகழ்வில் பங்கேற்றனர்.

## சாலையில் இனி குப்பை சிதறாது
# துர்நாற்றம் வீசாது: பிரத்யேக கேப்சூல் வடிவ கன்டெய்னரில் கொண்டு செல்ல திட்டம்




**சென்னை, அக்.16:** சென்னை மாநகராட்சியில் வீடுகள் மற்றும் குப்பைத் தொட்டிகளில் இருந்து சேகரிக்கப்படும் குப்பைகள் காம்பாக்டர் வாகனங்கள் மூலம் குப்பை மாற்றும் நிலையத்தில் கொட்டப்படும்.

பிறகு அங்கிருந்து கனரக வாகனங்கள் மூலம் கொடுங்கையூர், பெருங்குடியில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களுக்கு கொண்டு செல்லப்படும். இக்குப்பைகள் வழிகளில் சிதறுவதால் ஏற்படும் துர்நாற்றம் மற்றும் சுகாதார சீர்கேட்டால் சாலைகளை ஒட்டிய குடியிருப்புவாசிகளும், வாகன ஓட்டிகளும் பாதிக்கப் படுகின்றனர்.

தற்போது மாநகரின் பெரும்பாலான மண்டலங்களில் தனியார் மூலம் தூய்மைப் பணி மேற் கொள்ளப்படுகிறது. வட சென்னையில் ராயபுரம், திரு. வி.க.நகர், மணலி உள்ளிட்ட மண்டலங்களில் சென்னை என்விரோ சொல்யூஷன் நிறுவனம் தூய்மைப் பணிகளை மேற் கொள்கிறது.

இந்நிறுவனம் குப்பையை கொண்டு செல்லும்போது சிதறுவது, துர்நாற்றம் வீசுவதற்கு முற்றுப் புள்ளி வைக்க சுமார் ரூ.35 கோடியில் புதிய திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

அதன்படி, பிரத்யேக கேப்சூல் வடிவ கன்டெய்னர்களில் குப்பையே வெளியில் தெரியாதவாறு மூடிய நிலையில் கொண்டு செல்ல திட்டமிட்டுள்ளது. மேலும் குப்பைகளை அழுத்தி, அதிக அளவில் இந்த கேப்சூல்களில் கொண்டுசெல்லப்பட உள்ளது.

இதற்காக பிரத்யேக குப்பை மாற்று நிலையத்தை புளியந்தோப்பில் என்விரோ நிறுவனம் அமைத்து வருகிறது. அங்கிருந்து குப்பைகளை வெளியில் கொண்டு செல்ல 10 நவீன லாரிகள், நிலையத்துக்குள் இயக்க 2 லாரிகள் என மொத்தம் 12 லாரிகள் பயன்படுத்தப்பட உள்ளன.

இதில், 40 கேப்சூல்கள் அன்றாட பயன்பாட்டுக்கும் 8 கேப்சூல்கள் இருப்பில் வைக்கப்படவும் உள்ளன. நிலையத்துக்கு வரும் குப்பைகளை 4 நவீன அழுத்தும் இயந்திரங்கள் மூலம் மணிக்கு தலா 35 டன் வீதம் 140 டன் குப்பைகளை கேப்சூல்களில் அடைக்க முடியும்.

24 கனமீட்டர் கொள்ளளவு கொண்ட இந்த கன்டெய்னர்களில் 14 டன் குப்பைகளை அடைக்க முடியும். இந்நிலையம் தினமும் 840 டன் குப்பைகளை கையாளும் திறன் கொண்டது.

இந்த நவீன திட்டத்தால் குப்பை மாற்றும் நிலையம் மற்றும் குப்பை கொட்டும் வளாகம் இடையே இயக்கப்படும் லாரி நடைகள் குறையும். மேலும் போக்குவரத்து நெரிசல், வாகனப்புகை வெளியேற்றமும் குறையும். இத்திட்டம் விரைவில் பயன்பாட்டுக்கு வரவுள்ளது.

## ஆண்டிபட்டி அருகே
# டி.சுப்புலாபுரம் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்புத்திட்ட முகாமில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!



**தேனி, அக்.16:** தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், டி.சுப்புலாபுரம் கிராமத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலம் மக்கள் தொடர்புத் திட்ட முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் வ.சிவகிருஷ்ணமூர்த்தி தலைமையேற்று பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள் பெற்று அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசுகையில்,

மக்கள் மாவட்ட நிர்வாகத்தைத் தேடி வந்த நிலை மாறி, மாவட்ட நிர்வாகமே மக்களைத்தேடி முகாமிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க அரசு உத்தரவிட்டு ஒவ்வொரு மாதமும் தேர்வு செய்யப்பட்ட கிராமங்கள்தோறும் மக்கள் தொடர்பு முகாம்கள் நடைபெறுகின்றது.

அந்த வகையில் கடந்த 15 நாட்களுக்கு முன்பு ஆண்டிபட்டி வட்டம், டி.சுப்புலாபுரம் கிராமத்தைத் தேர்வு செய்து சுற்றுவட்டாரத்தில் உள்ள கிராம மக்களிடம் கோரிக்கைகள் குறித்து 79 மனுக்கள் பெறப்பட்டு, அம்மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்திடும் வகையிலும், மேலும், ஏற்கனவே பெறப்பட்ட மனுக்கள் மீதும் நடவடிக்கை என தற்பொழுது 230 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

அதேபோல் 300 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இந்த மனுக்கள் மீதும் மற்றும் ஏற்கனவே பெறப்பட்டு நிலுவையில் உள்ள மனுக்கள் மீதும் தனிக்கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுத்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் நோக்கம் பொதுமக்களின் மனுக்களுக்குத் தீர்வு கிடைக்கச் செய்வதாகும். அதேபோல் அரசின் நலத்திட்டங்கள் தகுதியுள்ள அனைத்து பயனாளிகளுக்கும் சென்றடைவதே முக்கிய நோக்கமாகும். பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் வகையிலும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசின் நலத்திட்டங்கள் குறித்து, பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் பல்வேறு துறைகளின் சார்பில் திட்ட விளக்கக் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சி அரங்குகளில் அரசின் நலத்திட்டங்கள், அவற்றைப் பெறுவதற்கான தகுதிகள், விண்ணப்பிக்கும் முறைகள் மற்றும் தேவையான ஆவணங்கள் குறித்த விவரங்கள் விளக்கமாக எடுத்துரைக்கப்படுகின்றன.

எனவே, பொதுமக்கள் அனைவரும் இக்கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டு, தங்களுக்குத் தேவையான திட்டங்கள் குறித்த விவரங்களைத் தெரிந்துகொண்டு, அரசின் நலத்திட்டங்களை உரிய முறையில் பயன்படுத்திப் பயன்பெறவேண்டும்.

மேலும், பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான திட்டங்கள் குறித்த சந்தேகங்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கேட்டுத் தெளிவுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பொதுமக்கள் தங்கள் பகுதியில் முகாம்கள் நடைபெறும்பொழுது தவறாமல் கலந்து கொண்டு உங்கள் ஊராட்சியின் வளர்ச்சிக்கும் உங்கள் வளர்ச்சிக்கும் தேவையான திட்டங்களை பெற்று பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் 8 பயனாளிகளுக்கு ரூ.1,97,160/- மதிப்பிலான விலையில்லா நத்தம் வீட்டுமனைப் பட்டாக்களையும், 9 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் (முழுப்புலம்), 5 பயனாளிகளுக்கு உட்பிரிவுடன் கூடிய பட்டா மாறுதல், 68 பயனாளிகளுக்கு ரூ.29,92,000/- மதிப்பிலான இ-பட்டாக்கள் என மொத்தம் 230 பயனாளிகளுக்கு ரூ.1,77,87,160/- மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வ.சிவகிருஷ்ணமூர்த்தி வழங்கினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த, அரசின் திட்டங்கள் குறித்த விளக்கக் கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

இந்நிகழ்வில், ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் ஆ.மகாராஜன், மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், சார் ஆட்சியர் பெரியகுளம் தவலேந்து, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) திருமதி கவிதா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## வணிகச் செய்திகள்

# புதிய கார்களுக்கு 2029-ம் ஆண்டு முதல் 'பி.எஸ்-7' மாசு கட்டுப்பாட்டு விதி அமல்

**புதுடில்லி, அக்.16:** இந்தியாவில் வாகனப்புகையால் ஏற்படும் காற்று மாசுபாட்டைக் குறைக்க, புதிய கார்கள் மற்றும் எஸ்.யு.வி. ரக வாகனங்களுக்கு அடுத்த கட்ட தீவிர 'பி.எஸ்-7' மாசு கட்டுப்பாட்டு விதிகளை அறிமுகம் செய்ய மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சகம் திட்டமிட்டுள்ளது. இதற்கான வரைவு அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

இதன்படி, இந்த புதிய விதிகள் 2029-ம் ஆண்டு ஏப்ரல் 1-ந் தேதி முதல் தொடங்கி, 2035-ம் ஆண்டு ஏப்ரல் வரை 3 கட்டங்களாக 6 ஆண்டுகளுக் குள் முழுமையாக அமல்படுத்தப்படும். இதில் 2-வது கட்டம் 2031-ம் ஆண்டு நடைமுறைக்கு வரும்.

இந்த புதிய விதிகளால் நைட்ரஜன் ஆக்சைடு, பர்டிகுலேட் மேட்டர் போன்ற நச்சு வாயுக்களின் வெளியீடு பெருமளவு குறைக்கப்படும். எனினும், தற்போது புழக்கத்தில் உள்ள 'பி.எஸ்-6' வாகனங்களுக்கு இதனால் எந்த பாதிப்பும் ஏற்படாது என்றும், அவற்றின் ஆயுட்காலம் வழக்கம்போல் தொடரும் என்றும் மத்திய அரசு தெளிவுபடுத்தியுள்ளது. இந்தியாவில் கடந்த 2020-ம் ஆண்டு முதல் பி.எஸ்-6 விதிகள் அமலில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் பொருளாதாரம் 7% வளர்ச்சி அடையும்: ஐஎம்எப் கணிப்பு

**புதுடில்லி, அக்.16:** நடப்பு 2026-27 நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி (ஜிடிபி) 7 சதவீதமாக இருக்கும் என சர்வதேச நாணய நிதியம் (ஐஎம்எப்) கணித்துள்ளது.

அதன் உலகப் பொருளாதார கண்ணோட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: சாதகமான மக்கள்தொகை அமைப்பின் வேகம், பரந்து விரிவடையும் உள்நாட்டுச் சந்தை மற்றும் தொடர்ச்சியான கட்டமைப்புச் சீர்திருத்தங்களின் ஆதரவால் இந்தியாவின் வளர்ச்சித் திறன் வலுவடைந்து வருகிறது. தொடர் வளர்ச்சி வேகத்தைப் பிரதிபலிக்கும் வகையில் இந்தியாவின் மதிப்பீடுகள் தற்போது உயர்த்தப்பட்டுள்ளன.

அதன்படி, 2026-27 நிதியாண்டுக்கான இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி கடந்த ஜூலையில் அறிவித்த 6.4 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. 2027-28 நிதியாண்டுக்கான ஜிடிபி வளர்ச்சியும் 6.7 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. அமெரிக்கா-ஈரான் போர் மற்றும் ரஷ்யா-உக்ரைன் போர் போன்ற புவிசார் அரசியல் நிச்சயமற்ற தன்மைகள் நிலவியபோதிலும், எரிபொருள் தேவைகளுக்குப் பிற நாடுகளைச் சார்ந்திருக்கும் இந்தியாவுக்கான வளர்ச்சி மதிப்பீடு உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிகரத்தின் தினத்தென்றல்

# சென்னையில் ஒரே நாளில் 118 பேருக்கு டெங்கு




**சென்னை, அக்.16:** தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் அருண்ராஜ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் கடந்த ஆண்டு டெங்கு காய்ச்சலால் 25,585 பேர் பாதிக்கப்பட்டனர்.

இந்த ஆண்டு இதுவரை 23,241 பேர் டெங்கு பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். சென்னையில் அக்டோபர் 13-ம் தேதி 118 பேர் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் கட்டுக்குள் உள்ளது. டெங்குவை கட்டுப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது.

மாநகராட்சி மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார மருத்துவமனைகளில் மருத்துவர்கள் போதிய அளவில் உள்ளனர்.

## உடன்குடியில் 3,200 மெகாவாட் திறனில்

# புதிய விரிவாக்க மின் நிலையங்கள்: மின் வாரியம் ஒப்புதல் அளித்தது



**சென்னை, அக்.16:** உடன்குடியில் 3,200 மெகாவாட் திறனில் புதிய விரிவாக்க மின் நிலையங்கள் அமைப்பதற்கு மின்வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

கடந்த 2017ம் ஆண்டு உடன்குடியில் 660 மெகாவாட் திறனில், இரு அலகுகள் (1,320 மெகாவாட்) கொண்ட அனல் மின் நிலைய கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. இதில் முதல் அலகில் கடந்த செப்டம்பர் 5ம் தேதி வணிக ரீதியிலான மின் உற்பத்தி தொடங்கியது. 2வது அலகில் இந்தாண்டு இறுதிக்குள் மின் உற்பத்தியைத் தொடங்குவதற்கான பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே, இந்த மின் நிலையத்தின் அருகில் 660 மெகாவாட் திறனில் இரு அலகுகள் கொண்ட 'உடன்குடி2' மற்றும் 'உடன்குடி3' ஆகிய மின் நிலையங்களை அமைக்க திட்டமிடப்பட்டிருந்தது. தற்போது அந்த திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, தலா 660 மெகாவாட் அலகுகளுக்குப் பதிலாக, தலா 800 மெகாவாட் திறனில் நான்கு அலகுகள் என, மொத்தம் 3,200 மெகாவாட் திறனில் புதிய விரிவாக்க மின் நிலையங்களை அமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதற்கு அண்மையில் நடந்த மின்வாரிய இயக்குனர்கள் குழு கூட்டத்தில் அதிகாரப்பூர்வ ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இப்புதிய மின் திட்டங்கள் அனைத்தும் பொது தனியார் கூட்டு முயற்சியில் அமைக்கப்பட உள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான திட்ட ஆலோசகராக, தமிழக உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் நியமிக்க உள்ளது.

இந்நிறுவனம் திட்டத்திற்கான சாத்தியக்கூறு ஆய்வு, விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் 'டெண்டர்' ஆவணங்களை உருவாக்குதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடன்குடி மின் திட்டத்தின் முக்கிய சிறப்பம்சமே, இதற்காக அமைக்கப்பட்டுள்ள பிரத்யேக கடல்சார் உள்கட்டமைப்பு தான். கடற்கரையில் இருந்து 7 முதல் 8 கி.மீ தூரத்திற்கு கடலுக்குள் தனியாக அமைக்கப்பட்டுள்ள நிலக்கரி இறங்குதளம் மூலமாக கப்பல்களில் இருந்து நிலக்கரி நேரடியாக இறக்கப்படும்.

அங்கிருந்து மணிக்கு 2,000 டன் நிலக்கரியைக் கொண்டு சேர்க்கும் அதிநவீன கன்வேயர் பெல்ட் வழியாக மின் நிலையத்திற்கு நிலக்கரி கொண்டு வரப்படுகிறது. இந்த பிரத்யேக துறைமுக வசதி கொண்ட தமிழகத்தின் முதல் மின் திட்டம் உடன்குடி என்பது குறிப்பிடத்தக்கது.

## திருப்போரூரில் டாக்டர் அப்துல் கலாமின்

# 95வது பிறந்தநாள் விழா பொதுமக்களுக்கு அன்னதானம்: மரக்கன்றுகள் வழங்கி கொண்டாட்டம்



**திருப்போரூர், அக்.16:** மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவரும், இந்தியாவின் ஏவுகணை நாயகனுமான டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் 95வது பிறந்தநாளை முன்னிட்டு,

*We The Leaders* (நாம் தலைவர்கள்) அமைப்பின் சார்பில் திருப்போரூரில் பொதுமக்களுக்கு அன்னதானம் மற்றும் மரக்கன்றுகள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது. நேற்று காலை சுமார் 08.00மணியளவில் நடைபெற்றது.

இதில் பசுமையான இந்தியா வளமான இந்தியா" என்ற உயரிய நோக்கத்துடனும், டாக்டர் அப்துல் கலாமின் கனவுகளை நனவாக்கும் வகையிலும் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டதுடன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் ராணுவ வீரர் கந்தசாமி, பாலகிருஷ்ணன், ராஜசேகர், நாகராஜ், மற்றும் சமூக ஆர்வலர் குமரவேல் ஆகியோர் கலந்துகொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தார்கள்.

மேலும், *We The Leaders* அமைப்பின் தன்னார்வலர்களான ரவி, ராஜபாண்டியன், சுப்ரமணியசிவா, மாமல்லன், பிரகாஷ், வினோத், லிங்கமூர்த்தி, மணிகண்டன், கோபு, கார்த்திக், யுவராஜ், ராதாகிருஷ்ணன், தர்ஷன் தீரஜ் சிவா குமார் விஜேயபாபு அரவிந்த் ஆகியோர் ஒருங்கிணைந்து நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்தினார்கள்.

இளைஞர்கள் சமூகப் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்ற அப்துல் கலாமின் சிந்தனைகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில் நடைபெற்ற இந்தச் சமூகநல நிகழ்ச்சி சிறப்பாக நிறைவடைந்தது.

கனவு காணுங்கள்; கனவுகள் சிந்தனையாகவும், சிந்தனைகள் செயலாகவும் மாறட்டும்" என்ற அப்துல் கலாமின் கருத்தை முன்னிறுத்தி, கல்வி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக சேவையில் தொடர்ந்து ஈடுபடுவதே தங்களது நோக்கம் என *We The Leaders* அமைப்பினர் தெரிவித்தனர்.

அன்னதானமும் மரக்கன்றுகள் வழங்குதலும் இணைந்த இந்த விழா, அப்துல் கலாமின் பிறந்தநாளை அர்த்தமுள்ள சமூக சேவை நாளாக மாற்றியது. 200க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் வழங்கப்பட்டன .

# சென்னையில் மழைநீர் வடிகால் பணிகள் குறித்து முதல்வர் விஜய் ஆய்வு!



**சென்னை, அக்.16:** சென்னை பெரம்பூர் தொகுதி பேசின் பாலம் அருகே மழைநீர் வடிகால் பணிகள் குறித்து முதல்வர் விஜய் ஆய்வு செய்தார்.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை நேற்று தொடங்கியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. அதற்கு முன்னதாகவே நேற்று தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது. ஒரு சில பகுதிகளில் கனமழை பெய்தது.

இதனிடையே சென்னையில் தனது தொகுதியான பெரம்பூரில் பேசின் பாலம் அருகே மழைநீர் வடிகால் பணிகள் குறித்து முதல்வர் விஜய் ஆய்வு செய்தார். அவருடன் அதிகாரிகள் பலரும் உடனிருந்தனர்.

சென்னை மாநகராட்சி பேசின் பாலம் பகுதியில் ஓட்டேரி நல்லா கால்வாயானது பக்கிங்ஹாம் கால்வாயில் சேரும் இடத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆகாயத் தாமரைகள் மற்றும் வண்டல்களை அகற்றும் பணிகளை முதல்வர் விஜய் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## போதைப்பொருளுக்கு எதிராக 1,810 கி.மீ.

# பைக் பேரணி: டிஜிபி மகேஷ்குமார் அகர்வால் தொடங்கி வைத்தார்



**சென்னை, அக்.16:** போதைப்பொருளுக்கு எதிராக 5 மாநிலங்கள் வழியாக 1,810 கி.மீ. பைக் பேரணியை டிஜிபி மகேஷ் குமார் அகர்வால் சென்னையில் தொடங்கி வைத்தார்.

தேசிய ஒற்றுமை தினத்தை முன்னிட்டு, "போதைப் பொருளுக்கு எதிரான போராட்டம்" என்ற கருப்பொருளை மையமாக கொண்டு காவல் துறையினர் பங்கேற்ற தேசிய பைக் பேரணி சென்னை மெரினா கடற்கரை சாலையில் நடந்தது. இதை டிஜிபி மகேஷ் குமார் அகர்வால் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில், கூடுதல் டிஜிபி-க்கள் சங்கர், தினகரன், மத்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவு ஐ.ஜி. சுதாகர் உள்ளிட்ட உயர் போலீஸ் அதிகாரிகள் கலந்துகொண்டனர். சென்னையில் தொடங்கிய இந்த பேரணி ஆந்திரா, தெலங்கானா, கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய 5 மாநிலங்களை கடந்து செல்கிறது. மொத்தம் 14 நாட்கள் 1,810 கிலோ மீட்டர் தூரத்துக்கு இந்த பேரணி நடைபெற உள்ளது.

நிகழ்ச்சியில், டிஜிபி மகேஷ் குமார் அகர்வால் பேசியபோது, 'தமிழகத்தில் இந்த ஆண்டில் இதுவரை 12,595 வழக்குகள் போதைப் பொருள் தொடர்பாக பதிவு செய்யப்பட்டு 18 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

23 ஆயிரம் கிலோ கஞ்சா, 10 லட்சத்திற்கும் மேல் போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன" என்றார்.

## அனைத்து மாவட்டங்களிலும்

# புத்தகக் காட்சி: தமிழக அரசு ரூ.8.45 கோடி ஒதுக்கீடு



**சென்னை, அக்.16:** பள்ளிக் கல்வித் துறை செயலர் ஜெ.இன்னசென்ட் திவ்யா வெளியிட்ட அரசாணை:

தமிழகத்தில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் கண்காட்சிகள் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து 2022-23-ம் ஆண்டில் மாவட்டங்கள் ஏ, பி, சி என 3 வகையாகப் பிரிக்கப்பட்டன.

ஏ பிரிவுக்கு ரூ.17.50 லட்சம், பி பிரிவுக்கு ரூ.14 லட்சம், சி பிரிவுக்கு ரூ.12 லட்சம் வீதம் வீதம் மொத்தம் ரூ.4.96 கோடியில் புத்தகக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன.

2023-24 மற்றும் 2024-25 ஆகிய ஆண்டுகளிலும் அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் கண்காட்சிகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. நடப்பு கல்வியாண்டில் (2026-27) தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் கண்காட்சிகளை நடத்துவதற்காக, மொத்தம் ரூ.8.45 கோடி நிதியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

பொது நூலக இயக்குநர் இந்த நிதியை மாவட்டக் கருவூலங்கள் மூலம் முன்பணமாகப் பெற்று, புத்தகக் கண்காட்சிகளை நடத்திக் கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



## முஸ்லிமாக மதம் மாறியவர்கள்

# பி.சி. இடஒதுக்கீட்டை பெற முடியாது: உச்ச நீதிமன்றம்



**புதுடில்லி, அக்.16:** முஸ்லிமாக மதம் மாறியவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர்இடஒதுக்கீடு வழங்கும் தமிழக அரசின் கொள்கையை உறுதி செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

இஸ்லாத்துக்கு மதம் மாறிய 7 முஸ்லிம் பிரிவினரை பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் - (முஸ்லிம்கள் (Backward Class Muslims) என்று அங்கீகரித்து, அவர்களுக்கு தமிழக அரசு இட ஒதுக்கீடு வழங்கியது. தமிழக அரசின் இந்த முடிவை சென்னை உயர் நீதிமன்றம் ரத்து செய்தது.

உயர் நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து தமிழக அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் பி.கே. மிஸ்ரா, ஸ்ரீ சந்திரசேகர் ஆகியோர் அடங்கிய அமர்வு, இன்று (வியாழக்கிழமை) தனது தீர்ப்பை வழங்கியது.

நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில், "இந்து சமூகத்தின் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் இஸ்லாத்துக்கு மதம் மாறுவதால் அவர் தானாகவே இஸ்லாமிய சமூகத்தின் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் இடம்பெற முடியாது.

தமிழக அரசு பிறப்பித்த இந்த உத்தரவு, இட ஒதுக்கீட்டுச் சலுகைகளைப் பெறுவதற்காக ஒரு செயற்கையான பிரிவினரை உருவாக்குவதாக உள்ளது. ஒரு சமூகத்தைப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக அறிவித்து அவர்களுக்குச் சலுகைகள் வழங்குவதற்கு முன்பாக சட்டப்பூர்வமான சமூக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்து சமூக அமைப்பில் இருந்து இந்து அல்லாத சமூக அமைப்புக்கு மதம் மாறிய ஒருவர், இத்தகைய இடஒதுக்கீட்டுச் சலுகையைக் கோர முடியாது." என தீர்ப்பளித்தனர்.

# ரூ.13.75 லட்சம் கடன் அனுமதி: தனியார் வங்கிக்கு நுகர்வோர் ஆணையம் அபராதம்

## வாடிக்கையாளர் ஒப்புதல் இன்றி

**சென்னை, அக்.16:** வாடிக்கையாளரின் உரிய அனுமதியின்றி ரூ.13.75 லட்சம் தனிநபர் கடனை உடனடியாக அனுமதித்த வழக்கில், தனியார் வங்கிக்கு ரூ.55,000 அபராதம் விதித்து சென்னை வடக்கு மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை கொளத்தூரைச் சேர்ந்தவர் நிஹ்மத்துல்லா. இவர் நுங்கம்பாக்கத்தில் உள்ள தனியார் வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்திருந்தார். இந் நிலையில் கடந்த 2023 பிப்ரவரி 21-ம் தேதி அன்று, மின் கட்டண நிலுவை இருப்பதாக வந்த போலியான குறுஞ்செய்தியை நம்பிய இவரை, மர்ம நபர்கள் 'ரிமோட் ஆக்ஸஸ்' செயலியை பதிவிறக்கம் செய்து ஏமாற்றியதாக கூறப்படுகிறது.

தொடர்ந்து, பாதிக்கப்பட்ட நபர் உரிய கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத சூழலிலும், அவரது பெயரில் 'இன்ஸ்டா பர்சனல் லோன்' வாயிலாக ரூ.13.75 லட்சம் கடன் வங்கியால் உடனடியாக அனுமதிக்கப்பட்டு கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

அடுத்த சில நிமிடங்களிலேயே அதில் ரூ.9.50 லட்சம் மர்ம நபர்களின் பீகார் மற்றும் மேற்கு வங்க கணக்குகளுக்கு மாற்றப்பட்டு மோசடி செய்யப்பட்டது. எஞ்சிய தொகையான ரூ.4.24 லட்சத்தை வங்கி நிர்வாகமே நிலையான வைப்புத் தொகையாக மாற்றியதோடு, பாதிக்கப்பட்ட நபரிடமே மாதாந்திர தவணை தொகையை செலுத்துமாறு நெருக்கடி கொடுத்து வந்ததாக கூறப்படுகிறது.

இதனால் மன உளைச்சலுக்கு ஆளான நிஹ்மத்




துல்லா, சென்னை வடக்கு மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் வங்கிக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த ஆணையத் தலைவர் டி.கோபிநாத், உறுப்பினர் கவிதா கண்ணன் ஆகியோர் அடங்கிய அமர்வு, "கடன் விண்ணப்பம், கடன் அனுமதி மற்றும் பணம் வழங்கல் ஆகியவை ஒரே நாளில், ஒரே நேரத்தில் நடைமுறைப் படுத்தப் பட்டுள்ளது.

வருமானம் மற்றும் திருப்பிச் செலுத்தும் திறன் போன்ற உரிய நடைமுறைகளை பின்பற்றாமல், வங்கியின் பலவீனமான பாதுகாப்பு அமைப்பால் மோசடி நபர்கள் பயனடைய வழிவகுத்ததற்கு வங்கியின் சேவைக் குறைபாடுதான் காரணம்.

எனவே, நிஹ்மத்துல்லா பெயரிலுள்ள ரூ.13.75 லட்சம் கடன் கணக்கையும், எஞ்சிய பணத்தில் தொடங்கப்பட்ட வைப்புத் தொகையையும் உடனடியாக ரத்து செய்ய வேண்டும்" என வங்கிக்கு ஆணையம் உத்தரவிட்டது.

மேலும், வாடிக்கையாளருக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு நஷ்டஈடாக ரூ.50 ஆயிரம் மற்றும் வழக்கு செலவாக ரூ.5,000 என மொத்தம் ரூ.55 ஆயிரத்தை 45 நாட்களுக்குள் வழங்க வேண்டும். கடன் விவகாரத்தால் பாதிக்கப்பட்ட அவரது 'சிபில்' மதிப்பீட்டை சீரமைக்கவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தது..

# ஜெகன் மோகன் ரெட்டி வழக்கை தினமும் விசாரிக்கிறது நீதிமன்றம்

**ஹைதராபாத், அக்.16:** ஒய்.எஸ்.ஆர் காங்கிரஸ் கட்சித் தலைவரும், முன்னாள் ஆந்திர முதல்வருமான ஜெகன் மோகன் ரெட்டியின் சட்ட விரோத சொத்துக்குவிப்பு வழக்கில், அமலாக்கத்துறை தொடர்பான வழக்குகளை இனி தினந்தோறும் ஹைதராபாத் சிபிஐ நீதிமன்றம் விசாரிக்க உள்ளது.

ஹைதராபாத் நாம்பல்லியில் உள்ள சிபிஐ சிறப்பு நீதிமன்றத்தில் இவ்வழக்கு கடந்த 9 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இதனிடையே ஜெகன் மோகன் ரெட்டி முதல்வர் ஆனதால், 'முதல்வர் பதவியில் இருப்பவர் ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்தில் ஆஜராகும் போது அரசுப் பணம் அதிகம் செலவாகிறது' என்பதை காரணம் காட்டி நேரில் ஆஜராக விலக்கு கோரினார். நீதிமன்றமும் அனுமதி அளித்ததால் வழக்கு மந்தமானது.

ஜெகன் மோகன் ரெட்டியின் சொத்துக்குவிப்பு வழக்கை சிபிஐயும், அமலாக்கத்துறையும் விசாரித்தன. இதில் அமலாக்கத்துறையின் குற்றப்பத்திரிகை கடந்த 9 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. இந்நிலையில், அமலாக்கத்துறையினர் ஆந்திர உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தனர். அதில், "இதுவரை ஜெகன் மோகன் வழக்கை சிபிஐ மட்டுமே விசாரித்து வருகிறது; எங்கள் துறையின் வழக்கு எடுக்கப்படவில்லை.

எனவே, எங்கள் துறை தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையையும் ஏற்று, சிபிஐ நீதிமன்றம் தினசரி விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும்" எனக் கோரப்பட்டிருந்தது. இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதி, இனி அமலாக்கத்துறையின் வழக்கையும் சேர்த்துத் தினசரி விசாரணை நடத்த வேண்டும் என உத்தரவிட்டார். மேலும், இது தொடர்பாக ஜெகன் மோகனின் வழக்கறிஞர்களுக்கு நோட்டீஸ் பிறப்பித்தார்.

# தமிழகத்தில் 203 கோயில்களுக்கு ஆன்மிக நூல்களை விநியோகிக்க அறநிலையத் துறை டெண்டர்

**சென்னை, அக்.16:** தமிழகம் முழுவதும் உள்ள 203 கோயில்களின் புத்தக விற்பனை நிலையங்களுக்கு ஆன்மிக நூல்களை விநியோகம் செய்ய, இந்து சமய அறநிலையத் துறை ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளது.

இதற்கான டெண்டரை அக்.30-ம் தேதி மாலை 3 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக 493 தலைப்புகளில் 11 லட்சத்து 27,500 புத்தகங்கள் தயார் நிலையில் உள்ளன.

182 டன் எடையுள்ள இந்தப் புத்தகங்கள், சென்னை கீழ்ப்பாக்கம், ராயப்பேட்டை மற்றும் அகத்தீஸ்வரர் கோயில் திருமண மண்டபம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்க ரூ.1 லட்சம் முன்வைப்புத் தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், புத்தகங்களை வாகனத்தில் ஏற்றிய நாளிலிருந்து 15 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட கோயில்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும். புத்தகங்கள் சேதமடைந்தாலோ, எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டாலோ அதற்கான தொகை ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

கோயில்களிடம் விநியோகக் கட்டணம் வசூலிக்கக் கூடாது என்றும் நிபந்தனைகளை விதித்துள்ளது. இத்திட்டத்தில் 162 சைவக் கோயில்களும், 41 வைணவக் கோயில்களும் இடம்பெற்றுள்ளன.

சென்னை கபாலீஸ்வரர் கோயில், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில், பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயில், ஸ்ரீரங்கம் அரங்கநாதசுவாமி கோயில் உள்ளிட்ட முக்கியக் கோயில்களுக்கும் புத்தகங்கள் விநியோகம் செய்யப்பட உள்ளன. டெண்டர் விவரங்களை www.tntenders.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்துகொள்ளலாம்

## அரிசி வரத்து குறைந்துள்ளதால்

# தமிழகத்தில் விலை உயர்ந்துள்ளது: அமைச்சர்

**சென்னை, அக்.16:** ஆந்திரம், கர்நாடகத்தில் இருந்து அரிசி வரத்து குறைந்துள்ளதால் தமிழகத்தில் அரிசி விலை உயர்ந்துள்ளது என அமைச்சர் வெங்கடரமணன் கூறியுள்ளார்.

தமிழகத்தில் அரிசி, பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட உணவுப் பொருள்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. விலைவாசி உயர்வு குறித்து எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பி வருகின்றன.

தமிழக உணவுத்துறை அமைச்சர் வெங்கடரமணன், அரிசி விலை உயரவில்லை என்று சமீபத்தில் கூறியதற்கு கடும் விமர்சனங்கள் எழுந்தன.



இந்நிலையில் இன்று சென்னையில் செய்தியாளர்களுடன் பேசிய அமைச்சர் வெங்கடரமணன், "ஆந்திரம், கர்நாடகத்தில் இருந்து அரிசி வரத்து குறைந்துள்ளதால் தமிழகத்தில் அரிசி விலை உயர்ந்துள்ளது. அரிசி, சர்க்கரை, பருப்பு விலை தொடர்பாக ஓரிரு நாள்களில் நடவடிக்கை எடுக்கப்படும். விலை கண்காணிப்புக் குழுவுடன் ஆலோசனை நடத்தி இருக்கிறோம். விரைவில் முடிவு அறிவிக்கப்படும்.

அனைத்து கருத்துகளையும் உள்வாங்கி மக்களுக்கு எது தேவையோ அதன்படி இந்த அரசு செயல்படுகிறது.

என்னுடைய வாழ்க்கையே ரேஷன் கடையில்தான் இருந்திருக்கிறது. வரிசையில் நின்று பொருள்கள் வாங்கியிருக்கிறோம். நாங்கள் எல்லாம் அடித்தட்டு மக்கள்தான். அங்கிருந்துதான் வந்திருக்கிறோம்.

அரிசி, சர்க்கரை, பருப்பு என அனைத்து உணவுப் பொருள்களுக்கும் தேவையான திட்டங்களை வகுத்திருக்கிறோம். 2, 3 நாள்களில் அதுகுறித்து அறிவிக்கப்படும்" என்றார்.

# பருவமழை முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் என்னென்ன? அமைச்சர் செங்கோட்டையன் விளக்கம்

**சென்னை, அக்.16:** "வடகிழக்கு பருவமழையை பொறுத்தவரை, மக்களுக்கு பாதுகாப்பு தரும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன" என அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் தொடர்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் செங்கோட்டையன் ஆலோசனை மேற்கொண்டார். சென்னை அவசரகால கட்டுப்பாட்டு மையத்தில் வானிலை ஆய்வு மையம், காவல்துறை, கடற்படை, பேரிடர் மேலாண்மை அதிகாரிகளுடன் இந்த ஆலோசனை நடந்தது.

பின்னர், இது குறித்து அமைச்சர் செங்கோட்டையன் செய்தியாளர்களிடம் பேசுகையில், "வடகிழக்கு பருவமழையை பொறுத்தவரை, மக்களுக்கு பாதுகாப்பு தரும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மக்களுக்கு தேவையான உணவுப் பொருட்கள், அனைத்து துறைகளின் சார்பில் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முன்பு நடந்த சம்பவங்களைப் பொறுத்து தற்போது நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம்.



பெரும் மழையால் மின்சாரப் பிரச்சினை வந்தால், ஆங்காங்கே ஜெனரேட்டர்கள் சரியாக உள்ளதா என சரிபார்க்கப்பட்டு வருகிறது. சென்னை உள்ளிட்ட பல்வேறு கடலோரப் பகுதிகளில் வெள்ளம் வரும்போது, அப்பகுதி மக்களை பாதுகாப்பது குறித்தும் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

வடகிழக்கு பருவமழை வரும்போது, மக்களுக்கு இடர்பாடுகள் இல்லாமல், பொருட்சேதம் இல்லாமல், சாலைகளில் தண்ணீர் தேங்காமல் மின்சாரம் தடையில்லாமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அனைத்து பகுதிகளிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். சென்னையை பொறுத்தவரை 15 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அதற்கு உயர் அதிகாரிகள், பொறுப்பு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ரூப்ஸ் எல் நினோ மூலம் நமக்கு கூடுதல் எச்சரிக்கை கொடுப்பட்டுள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்கள் தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்படுகிறது. மாநில அரசுக்கு எவ்வளவு நிதி வழங்க வேண்டும் என மத்திய அரசு தான் முடிவு செய்யும். நாங்கள் அதற்கான கோரிக்கைகளை விடுப்போம். நிவாரணம் வழங்குவது குறித்து ஆலோசிக்கப்படும்"

இவ்வாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ரேஷன் கடை பாமாயில் விநியோக

# டெண்டருக்கு உயர் நீதிமன்றம் இடைக்கால தடை

**சென்னை, அக்.16:** தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ரேஷன் கடைகளில் பாமாயில் பாக்கெட் விநியோகம் செய்ய அறிவிக்கப்பட்ட டெண்டருக்கு இடைக்கால தடை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ரேஷன் கடைகள் வாயிலாக மக்களுக்கு பாமாயில் விநியோகம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஒரு லிட்டர் வீதம் சுமார் 600 லட்சம் பாமாயில் பாக்கெட்டுகளை கொள்முதல் செய்ய தமிழ்நாடு கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை டெண்டர் அறிவிப்பை கடந்த ஜூன் 5-ம் தேதி வெளியிட்டது.

இதில் பல்வேறு நிறுவனங்கள் பங்கேற்றன. கடந்த செப்.8-ம் தேதி டெண்டர் திறக்கப்பட்டு, 4 நிறுவனங்களுக்கு பாமாயில் பாக்கெட்டுகள் விநியோகம் செய்யும் டெண்டர் ஒதுக்கப்பட்டது.

இதில், முதல் கட்டமாக 200 லட்சம் பாமாயில் பாக்கெட்டுகளை வருகிற 29-ம் தேதிக்குள் நுகர்பொருள் வாணிபக் கழக குடோன்களுக்கு இந்த நிறுவனங்கள் விநியோகம் செய்ய கடந்த செப்.29-ம் தேதி உத்தரவிடப்பட்டது.

விநியோகம் செய்ய வேண்டிய பாமாயில் பாக்கெட்டுகள் விகிதாசார அடிப்படையில் பிரிக்கப்படவில்லை என்று கூறி நுகர்பொருள் வாணிபக் கழகம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து டெண்டர் எடுத்துள்ள கேடிவி ஹெல்த் புட் நிறுவனம் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

அதில், "200 லட்சம் பாக்கெட்டுகளை முதலில் விநியோகம் செய்ய பிறப்பிக்கப்பட்ட உத்தரவில், 200 லட்சம் பாக்கெட்கள் விநியோகம் செய்ய டெண்டர் எடுத்துள்ள எம்ஜிஎம் நிறுவனம் 80 லட்சம் பாக்கெட்டுகளும், 210 லட்சம் பாக்கெட்டுகளை விநியோகம் செய்ய டெண்டர் எடுத்துள்ள குமார் ஆக்ரோ நிறுவனம் 52 லட்சம் பாக்கெட்டுகளும், 180 லட்சம் பாக்கெட்டுகளை வழங்க வேண்டிய இன்டகரேட் நிறுவனம் 34 லட்சம் பாக்கெட்டுகளும், 360 லட்சம் பாக்கெட்டுகளை வழங்க வேண்டிய எங்கள் நிறுவனம் 34 லட்சம் பாக்கெட்டுகளையும் வழங்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

அதாவது விநியோகம் செய்ய வேண்டிய பாக்கெட்டுகள் அடிப்படையில் சரியான விகிதாசார அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. 360 லட்சம் பாமாயில் பாக்கெட்டுகளை விநியோகம் செய்ய டெண்டர் எடுத்துள்ள எங்கள் நிறுவனம் 34 லட்சம் பாக்கெட்டுகளை வழங்க வேண்டும் என்றும் 150 லட்சம் பாக்கெட்டுகளை விநியோகம் செய்ய வேண்டிய எம்ஜிஎம் ஆயில் நிறுவனம் 80 லட்சம் பாக்கெட்டுகளை வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டது சரியானதல்ல.

எனவே, பாமாயில் விநியோகம் தொடர்பாக கடந்த செப்.29-ம் தேதி பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும். விகிதாசார அடிப்படையில் பாமாயில் பாக்கெட்டுகளை விநியோகம் செய்ய உத்தரவிடும்படி அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நீதிபதி பி.டி. ஆஷா முன்பு விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆர்.சரவணன் ஆஜராகி வாதிட்டார். அதனை பதிவு செய்துகொண்ட நீதிபதி, பாமாயில் விநியோகம் தொடர்பாக செப்.29-ம் தேதி நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்து விசாரணையை நவ.2-ம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

# அமைச்சர் ஆதவ் அர்ஜுனா மீது வழக்குப் பதிவு செய்யக் கோரி அதிமுக சார்பில் நீதிமன்றத்தில் மனு

**சென்னை, அக்.16:** அதிமுகவின் பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் அவதூறாகப் பேசியதாக அமைச்சர் ஆதவ் அர்ஜுனா மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்ய கோரி அக்கட்சியின் சார்பில் சென்னை ஜார்ஜ் டவுன் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த அக்டோபர் 10-ம் தேதி தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, அதிமுகவுக்கும் - திமுகவுக்கும் இடையே ரகசிய ஒப்பந்தம் இருப்பதாகப் பேசி இருந்தார். இது அதிமுகவின் பெயருக்கும் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கும் களங்கம் விளைவிக்கும் வகையில் அவதூறாகப் பேசியதாக, கூறி அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவுக்கு எதிராக சென்னை ஜார்ஜ் டவுன் நீதிமன்றத்தில் அதிமுக மாவட்டச் செயலாளர் ஆதி ராஜாராம் வழக்கு தொடர்ந்துள்ளார்.

அதில், "மதுராந்தகம் இடைத்தேர்தலில் அதிமுக நிர்வாகிகள் இரட்டை இலை அல்லது சுயேச்சைசின்னத்துக்குப் பதிலாக திமுகவின் உதய சூரியன் சின்னத்துக்கு வாக்கு கேட்டதாகவும், பதிலுக்கு திமுகவினர் இரட்டை இலைக்கு வாக்கு கேட்டதாகவும், சுமார் 70 லட்சம் பணப்பட்டுவாடா மூலம் வாக்குகள் மாற்றப்பட்டதாகவும் ஆதவ் அர்ஜுனா பேசி இருந்தார்" என்று மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எந்தவித ஆதாரமுமின்றி, உள்நோக்கத்தோடு கட்சியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும், அதிமுக தொண்டர்களைக் தனது கட்சிக்கு இழுக்கும் நோக்கிலும் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தொடர்ந்து அவதூறு பரப்பி வருவதால் அவர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுத்து தண்டிக்க வேண்டும்" எனவும் மனுவில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்த மனு வரும் அக்டோபர் 21-ம் தேதி ஜார்ஜ் டவுன் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வர உள்ளது குறிப்பிடத்தக்கது.

சிகரத்தின் தினத்தென்றல்

## கொளத்தூரில் எஸ்ஐஆர் மூலம்

# ஸ்டாலினுக்கு குறி...: இண்டியா கூட்டணி ஆர்ப்பாட்டத்தில் திருமாவளவன் பேச்சு

**சென்னை, அக்.16:** "கொளத்தூர் தொகுதியில் வெற்றி பெறுவது கடினம் என ஸ்டாலினிடம் முன்பே சொன்னேன். நீங்கள் ஏன் தொகுதி மாறி நிற்கக் கூடாது என்றும் ஸ்டாலினிடம் கேட்டேன். கொளத்தூரில் எஸ்ஐஆர் மூலம் ஸ்டாலின் குறிவைக்கப்பட்டார்" என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.



தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி சென்னை எழும்பூரில் ஆளும் தவெகவை உள்ளடக்கிய இண்டியா கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அதில் பேசிய விசிக தலைவர் திருமாவளவன், "கொளத்தூர் தொகுதியில் ஸ்டாலின் வெற்றிபெறுவது கடினம் என எனக்கு ஒரு பெண்மணி போனில் தெரிவித்தார். நான் அதை முதலில் அலட்சியம் செய்தேன். பின்னர், 'உங்களுக்கு எதிராக சதி நடக்கிறது' என்று ஸ்டாலினிடம் சொன்னேன். பின்னர், கொளத்தூர் தொகுதியில் வெற்றி பெறுவது கடினம் என்று ஸ்டாலினிடமும், சேகர்பாபுவிடமும் சொன்னேன்.

நீங்கள் ஏன் தொகுதி மாறி நிற்கக் கூடாது? என்று ஸ்டாலினிடம் கேட்டேன். ஆனால், 'அனைத்தையும் சரியாக வெரிபிக்கேஷன்செய்துவிட்டோம். அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை' என்றனர். தேர்தலுக்கு முன்பே இந்த எச்சரிக்கை நம் கவனத்துக்கு வந்தது என்பதை சுட்டிக்காட்டவே இதைச் சொல்கிறேன்.

கொளத்தூர் தொகுதியில் 1 லட்சம் பேர் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர், ஆனால் அங்கு இறந்தவர்கள் 20 ஆயிரம் பேர். மிஞ்சியவர்கள் எப்படியோ நீக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகம் பேர் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இது குறித்து கவனம் செலுத்த வேண்டும். இது ஒரு கட்சிக்கு எதிரான நடவடிக்கையா, இல்லை?

இது ஒரு தேசத்துக்கு எதிரான சதி அல்லவா? எஸ்ஐஆர், இவிஎம்-ஐ பயன்படுத்தி தேர்தல் வெற்றிகளை திருடும் போக்கு எவ்வளவு ஆபத்தானது. தமிழகத்தில் , கேரளாவில் பாஜகாவால் வெல்ல முடியாது என்பதற்காக இவ்வாறு செய்துள்ளனர்.

அரவிந்த் கேஜ்ரிவால், மம்தா பானர்ஜி, பினராயி விஜயன், மு.க.ஸ்டாலின் ஆகியோர் தோற்கடிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தன்னியல்பாக தோற்கடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை என முன்பே சொன்னேன். இவர்கள் குறி வைக்கப்பட்டிருக்கிறார்கள். எஸ்ஐஆரை பயன்படுத்தி பாஜகவின் கொள்கை எதிரிகள் குறிவைத்து வீழ்த்தப்பட்டனர்" என்று திருமாவளவன் பேசினார்.

## நவம்பர் 1 முதல் செல்போன் அழைப்புகளில்

# அழைப்பவரின் பெயர் கட்டாயம் திரையில் தோன்றும்: மத்திய அரசின் தொலைத்தொடர்புத் துறை தகவல்

**புதுடில்லி, அக்.16:** நவம்பர் 1 முதல் செல்போன் அழைப்புகளில் அழைப்பவரின் பெயர் கட்டாயம் திரையில் தோன்றும் என மத்திய அரசின் தொலைத்தொடர்புத் துறை தகவல் தெரிவித்துள்ளது.




ஸ்பேம் மற்றும் தெரியாத எண்களிலிருந்து வரும் போலி அழைப்புகளை தடுக்கும் வகையில், வரும் நவம்பர் 1 முதல் தொலைபேசியில் அழைப்பவரின் பெயர், மறுமுனையில் கால் அட்டெண்ட் செய்பவரின் பெயர் டிஸ்ப்ளேவில் தெரிவது கட்டாயம் என்று டிராய் உத்தரவிட்டுள்ளது.

ஏர்டெல், ஜியோ, வோடபோன், ஐடியா உள்ளிட்ட அனைத்து தொலைத்தொடர்பு நிறுவனங்களும் இந்த நடைமுறையை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என டிராய் உத்தரவு பிறப்பித்துள்ளது. தொலைபேசி மூலமாக தொடர்புகொள்பவர்கள் யார் என்ற உண்மையான பெயர் விவரங்களை அழைப்பை பெறுபவர்களின் திரையில் காண்பிக்க வேண்டும். தொடர்ந்து அதிகரித்து வரும் ஸ்பேம் அழைப்புகள் மற்றும் மோசடிகள் குறித்த புகார்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கைளெடுக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய தொழில்நுட்ப வசதியின் மூலம், உங்களது போனில் ஒருவருடைய எண் சேமிக்கப்படவில்லை என்றாலும், அவர் உங்களை அழைக்கும்போது அவரது பெயர் திரையில் தோன்றும். இதற்காக ட்ரூகாலர் போன்ற செயலிகளை நம்பியிருக்க வேண்டியதில்லை. அழைப்பவர் சிம் கார்டு வாங்கும்போது வழங்கிய அதிகாரப்பூர்வ கேஒய்.சி ஆவணங்களின் அடிப்படையில் உள்ள பெயரே திரையில் காட்டப்படும். நவம்பர் 1 முதல் இந்த நடைமுறை அதிகாரப்பூர்வமாக அமலுக்கு வருகிறது.

வெளிநாடுகளில் இருந்து வரும் அழைப்புகளுக்கு பெயருக்கு பதிலாக இண்டர்நேஷனல் கால் என்று மட்டும் காண்பிக்கப்படும்.

# பால் இல்லாத 'பனீர்' விற்பனைக்கு எதிராக டெல்லி ஐகோர்ட்டில் வழக்கு: மத்திய அரசு பதிலளிக்க உத்தரவு

**புதுடில்லி, அக்.16:** பண்ணை சாராத, பால் அல்லாத பொருட்கள் அடங்கிய ஒப்புமை பனீர் விற்பனைக்கு எதிராக டில்லி ஐகோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது.




இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் கீழ் பனீர் என்பது பண்ணைஉற்பத்திப்பொருளாக வகைப்படுத்தப்பட்டு இருக்கும் நிலையில், வழக்கமான பனீரில் அடங்கியுள்ள ஊட்டச்சத்துகள் இல்லாத, இந்த பனீருக்கு தடை விதிக்க வேண்டும் என்றும், அந்த பொதுநல மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டு இருந்தது.

இந்த மனு பொறுப்பு தலைமை நீதிபதி நிதின் சாம்ப்ரே மற்றும் நீதிபதி சஞ்சய் சிங் அடங்கிய அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், இந்த விவகாரத்தில் இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் மற்றும் மத்திய அரசின் நிலைப்பாட்டை அறிய நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர். மேலும் டெல்லி அரசும் பதிலளிக்க அறிவுறுத்தப்பட்டது.

# ஆந்திரா: கனக துர்கை அம்மன் கோவிலில் ஜனாதிபதி முர்மு சாமி தரிசனம்

**விஜயவாடா, அக்.16:** ஜனாதிபதி திரவுபதி முர்மு 2 நாட்கள் பயணமாக ஆந்திரா சென்றுள்ளார். டில்லியில் இருந்து மாலை 4 மணியளவில் தனி விமானம் மூலம் புறப்படும் ஜனாதிபதி திரவுபதி முர்மு மாலை 6.30 மணியளவில் ஆந்திரா சென்றார்.

பின்னர் அங்கிருந்து கார் மூலம் அவர் விஜயவாடாவில் உள்ள இந்து மதக்கடவுளான கனக துர்கை அம்மன் கோவிலுக்கு சென்றார். கனக துர்கை அம்மன் கோவிலில் ஜனாதிபதி திரவுபதி முர்மு சாமி தரிசனம் செய்தார். ஜனாதிபதி முர்முவின் வருகையையொட்டி கனகதுர்கை அம்மன் கோவிலில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# சேலம் தவெக எம்எல்ஏ வெற்றி வழக்கு: ஐகோர்ட் தள்ளுபடி

**சென்னை, அக்.16:** நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில், சேலம் வடக்கு தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட்ட கே.சிவகுமார் 14,034 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார். அவரது வெற்றியை எதிர்த்து, இரண்டாம் இடத்தைப் பிடித்த திமுக வேட்பாளர் ஆர்.ராஜேந்திரன் சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்தத் தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி தவெக எம்எல்ஏ கே.சிவகுமார் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனுக்கள் நீதிபதி டி.பரத சக்கரவர்த்தி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது இரு தரப்பு வாதங்களையும் பதிவு செய்துகொண்ட நீதிபதி, தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரிய மனு மீதான தீர்ப்பை தள்ளிவைத்திருந்தார்.

அந்த மனு மீது நேற்று உத்தரவு பிறப்பித்த நீதிபதி, "சேலம் வடக்கு தொகுதி எம்எல்ஏ கே.சிவகுமாரின் நிராகரிப்பு மனுவை ஏற்று, அவரது வெற்றியை எதிர்த்து திமுக வேட்பாளர் ராஜேந்திரன் தொடர்ந்த தேர்தல் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

## அமைச்சர் செங்கோட்டையன்

# குதிரை பேரம்: ஆளுநரிடம் அதிமுக புகார்!

**சென்னை, அக்.16:** அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன் குதிரை பேரத்தை ஊக்குவிப்பதாக தமிழ்நாடு ஆளுநரிடம் அதிமுக புகார் அளித்துள்ளது.



அதிமுகவில் இருந்து முன்னாள் அமைச்சர்கள் உள்பட 6 எம்எல்ஏக்கள் தங்கள் பதவியை ராஜினாமா செய்து தவெகவில் இணைந்துள்ளனர். இதில் சமீபத்தில் நடந்த இடைத்தேர்தலில் மரகதம் குமரவேல், சத்தியபாமா ஆகிய இருவரும் தவெக சார்பில் போட்டியிட்டு வெற்றியும் பெற்றுளளனர்.

இந்த சூழலில், அதிமுகவிலிருந்து மேலும் 15 பேர் தவெகவுக்கு வரத் தயாராக இருப்பதாக தவெக அமைச்சர் செங்கோட்டையன் சமீபத்தில் தெரிவித்தது சர்ச்சையாகியுள்ளது.

இந்த நிலையில், சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் ஆளுநர் ஆர்.வி. ஆர்லேகரை நேரில் சந்தித்த அதிமுக பிரதிநிதிகள், அமைச்சர் செங்கோட்டையனுக்கு எதிராக புகார் அளித்தனர்.

இந்த சந்திப்புக்கு பிறகு செய்தியாளர்களுடன் அதிமுக கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி பேசியதாவது:

" ஆளுநரிடம் கொடுக்கப்பட்ட மனுவில், ஏற்கெனவே அதிமுகசார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 6 பேரை குதிரை பேரம் மூலம் வாங்கி, அவர்களை தவெக ராஜிநாமா செய்ய வைத்துள்ளது. இதன்மூலம் இடைத்தேர்தல் கொண்டு வந்து அவர்களை மீண்டும் போட்டியிட வைத்து, தங்கள் ஆட்சியைத் தக்கவைக்க முயற்சிக்கிறது.

தற்போது தவெகவின் மூத்த அமைச்சர் செங்கோட்டையன், மேலும் 15 பேர் தவெக வரவுள்ளதாக மேடையில் பேசியுள்ளார். அப்படியென்றால், தமிழ்நாட்டில் தொடர்ந்து குதிரை பேரம் நடைபெறுகிறது. அதற்கு அமைச்சர் செங்கோட்டையன்பேசியது சான்றாக உள்ளது. குதிரை பேரம் நடத்தும் தவெகவினர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தப்பட்டுள்ளது" என்றார்.

# தாறுமாறாக உயர்ந்த எலுமிச்சை விலை!

**சென்னை, அக்.16:** கடந்த ஒரு சில மாதங்களாகவே எலுமிச்சை விலை தாறுமாறாக உயர்ந்து வரும் நிலையில், சில்லறை விற்பனையில் இன்று ஒரு எலுமிச்சை ரூ.15 என்ற அளவுக்கு விற்பனையாகி வருகிறது.



வறட்சி மற்றும் கடும் வெய்யில் காரணமாக எலுமிச்சை விலை உயர்ந்திருந்த நிலையில், அடுத்து ஆயுதபூஜை உள்ளிட்ட பண்டிகை நாள்கள் வரவிருப்பதால் எலுமிச்சை விலை இந்த வாரத்தில் குறைய வாய்ப்பில்லை என்றே கூறப்படுகிறது.

எல்நினோ எதிரொலியாக தமிழ்நாடு முழுவதும் தற்போது வெய்யில் சுட்டெரித்து வருகிறது. வெப்பத்தில் இருந்து தற்காத்துக் கொள்ள பொதுமக்கள் குளிர்ச்சியான மற்றும் இயற்கை பானங்களை அதிக அளவில் பருகி வருகின்றனா். அந்த வகையில் எலுமிச்சம் பழச்சாறு மக்களின் விருப்பமான பானமாக இருக்கிறது.

இதனால் எலுமிச்சம் பழத்தின் தேவை அதிகரித்துள்ளதால் அதன் விலை கடுமையாக உயா்ந்துள்ளது. செப்டம்பர் மாதத்தில் ஈரோடு வஉசி சந்தையில் ரூ.150 முதல் ரூ.160 வரை விற்பனையாகி வந்த ஒரு கிலோ எலுமிச்சம் பழம், மெல்ல ரூ.250 ஆக உயா்ந்தது. மீண்டும் ரூ.50 உயா்ந்து ரூ.300-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதனால் சில்லறை விற்பனையில் ஒரு எலுமிச்சை பழம் ரூ.10 முதல் ரூ.15 வரை விற்பனை செய்யப்படுகிறது.

ஈரோடு சந்தைக்கு எலுமிச்சம் பழம், கோபி, சத்தியமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து அதிக அளவு விற்பனைக்கு வருகிறது. தற்போது அதன் வரத்து சற்று குறைந்துள்ளது. மாவட்டத்தில் கடும் வெயில் அடிப்பதால் விளைச்சல் குறைந்திருக்கலாம்.

அதே சமயம் எலுமிச்சம் பழத் தேவை அதிகமாக உள்ளது. இதனால்தான் விலை உயா்ந்துள்ளது. வரும் நாள்களில் வெயில் குறைந்தால் தேவை குறைந்து விலை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## பள்ளிக்கரணை சதுப்பு நில

# பக்கிங்ஹாம் கால்வாயில் வெள்ளத் தடுப்பு பணிகள்: முதல்வர் விஜய் நேரில் ஆய்வு



**சென்னை, அக்.16:** முதலமைச்சர் விஜய் சென்னை சோழிங்கநல்லூர் வட்டம், காரப்பாக்கத்தில் உள்ள ஒக்கியம் மடுவுவை நேரில் பார்வையிட்டு, வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு பள்ளிக்கரணை சதுப்பு நிலம் மற்றும் தெற்கு பக்கிங்ஹாம் கால்வாய் பகுதிகளில் நீர்வளத் துறையால் மேற்கொள்ளப்பட்டுவரும் வெள்ளத்தடுப்பு முன்னேற்பாட்டுப் பணிகளை ஆய்வு செய்தார்.

தென் சென்னையின் உயிர்நாடி வடிகாலாக ஒக்கியம் மடுவு விளங்குகிறது. தென் சென்னை புறநகர்ப்பகுதிகளில் உள்ள ஏரிகளின் உபரி நீர் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் சேர்ந்து, ஒக்கியம் மடுவு, தெற்கு பக்கிங்ஹாம் கால்வாய் மற்றும் முட்டுக்காடு முகத்துவாரம் வழியாக மட்டுமே கடலைச் சென்றடைகிறது.

2023 டிசம்பரில் மிக்ஜாம் புயலின்போது இந்த நீர்வழி அடைபட்டதால், வேளச்சேரி, பள்ளிக்கரணை, மேடவாக்கம், பெருங்குடி, துரைப்பாக்கம், சோழிங்கநல்லூர் பகுதி மக்கள் பல நாட்கள் தண்ணீர் தேக்கத்தால் பாதிக்கப்பட்டனர்.

இதற்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், நீர்வளத் துறை ஒக்கியம் மடுவுவைத் தூர்வாரி ஆழப்படுத்தி அகலப்படுத்தியுள்ளதுடன், கண்ணகி நகர் போன்ற குடியிருப்புப் பகுதிகளைப் பாதுகாக்க வெள்ளத் தடுப்புச் சுவர் அமைத்து, கரைகளையும் பலப்படுத்தியுள்ளது.

நீண்ட காலமாக வெள்ள ஓட்டத்திற்குத் தடையாக இருந்த, 70 மீட்டருக்கும் குறைவான நீர்வழி கொண்ட காரப்பாக்கம் பாலம், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தால் 120 மீட்டர் நீர்வழியுடன் கூடிய அகலமான உயர்மட்டப் பாலமாக மாற்றியமைக்கப்பட்டு வருகிறது. இதனால் வெள்ள நீர் தடையின்றிக் கடலுக்குச் செல்ல வழி ஏற்படும்.

பருவமழை முன்னேற்பாடாக, ஒக்கியம் மடுவு, வேளச்சேரி, நாராயணபுரம், ஆதம்பாக்கம், கோவிலம்பாக்கம் ஏரிகள், சதுப்பு நிலத்தைச் சுற்றியுள்ள வடிகால்கள் மற்றும் அடையாறு முதல் சோழிங்கநல்லூர் வரையிலான தெற்கு பக்கிங்ஹாம் கால்வாய் முழுவதும் ஆகாயத் தாமரை, களைச் செடிகள், வண்டல் மற்றும் மிதக்கும் கழிவுகள், மிதவை இயந்திரங்கள் மற்றும் கனரக இயந்திரங்கள் மூலம் அகற்றப்பட்டு வருகின்றன.

தாம்பரம், பல்லாவரம் பகுதிகளில் உள்ள உபரிநீர்க் கால்வாய்கள் சுத்தம் செய்யப்பட்டு, வெள்ள ஒழுங்கிகளின் மதகுக் கதவுகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. வெள்ளநீர் விரைவாகக் கடலில் கலக்கும் வகையில் முட்டுக்காடு முகத்துவாரம் மாதந்தோறும் திறந்த நிலையில் பராமரிக்கப்படுகிறது.

முதலமைச்சர் இந்த ஆய்வின்போது, அனைத்துப் பணிகளையும் பருவமழை தீவிரமடைவதற்கு முன் விரைந்து முடிக்கவும், பாதிப்புக்குள்ளாகக்கூடிய இடங்களில் இயந்திரங்களைத் தயார் நிலையில் வைக்கவும், நீர்மட்டத்தை இரவு பகலாகக் கண்காணிக்கவும், நீர்வளத் துறை, சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் ஒருங்கிணைந்து செயல்படவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, அமைச்சர்கள் ந.ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, ப. வெங்கட ரமணன், ராஜ்மோகன், நெ.மரிய வில்சன், ரா.குமார், சட்டமன்ற உறுப்பினர் இசிஆர் ப. சரவணன், நகராட்சி நிருவாக துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, நீர்வளத்துறை செயலாளர் பிரசாந்த் வடநெரே, மாநகராட்சி ஆணையாளர் ஜி.எஸ். சமீரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## வெறும் உருவ பொம்மையை எரிப்பது

# இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமல்ல: உயர் நீதிமன்றம்

**மதுரை, அக்.16:** மதுரை: காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க கோரி போராடியவர்கள் மீதான வழக்கை உயர் நீதிமன்றம் ரத்து செய்துள்ளது. அத்துடன், வெறும் உருவ பொம்மையை எரிப்பது மட்டுமே இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகாது என்று உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

திருச்சி மாவட்ட தமுமுக மாவட்ட பொருளாளர் ராஜா, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க நடவடிக்கை எடுக்காத மத்திய அரசை கண்டித்தும், உடனடியாக காவிரி மேலாண்மை வாரியம் அமைத்து தமிழகத்திற்கு உரிய காவிரி நீர் வழங்கக் கோரி கடந்த 2018-ல் திருச்சி கண்டோன்மெண்ட் பகுதியில் போராட்டம் நடத்தப்பட்டது.

இப்போராட்டத்தால் போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. இருப்பினும் நான் உட்பட 7 பேர் மீது திருச்சி கண்டோன்மென்ட் போலீசார் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த மனுவை நீதிபதி ஆர்.விஜயகுமார் முன்பு விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில், ஜனநாயக அடிப்படையில் விவசாயிகளுக்கு ஆதரவாக போராட்டம் நடத்தப்பட்டது. ஆனால் கடுமையான சட்ட பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அடிப்படை உரிமைகளுக்கு போராடும் மக்கள் மீது இது போன்ற பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யக்கூடாது என ஏற்கனவே பல்வேறு உத்தரவுகள் உள்ளன எனக் கூறப்பட்டது.

அரசு தரப்பில், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக உருவ பொம்மைகள் எரித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். வழக்கை ரத்து செய்யக் கூடாது எனக் கூறப்பட்டது.

பின்னர் நீதிபதி பிறப்பித்த உத்தரவு: இந்த வழக்கில் சாட்சிகள் அனைவரும் காவல் துறை அதிகாரிகளாக உள்ளனர்.

பொதுமக்கள் யாரும் சாட்சியாகக் காட்டப்படவில்லை. மனுதாரர்கள் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தினர் என்றோ அல்லது பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தனர் என்றோ எந்த ஒரு குற்றச்சாட்டும் இல்லை.

இது ஒரு ஜனநாயக முறையிலான போராட்டமாகும். வெறும் உருவ பொம்மையை எரிப்பது மட்டுமே இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகாது.

எனவே, மனுதாரர்களுக்கு எதிரான குற்றவியல் நடவடிக்கைகளைத்தொடர்வது சட்டத்தின் செயல்முறையைத் துஷ்பிரயோகம் செய்வதற்கு மட்டுமே வழிவகுக்கும். எனவே, வழக்கு ரத்து செய்யப்படுகிறது என உத்தரவிட்டார்.

# வாக்காளர் பட்டியல் திருத்த வழக்கு: உச்சநீதிமன்றத்தில் 28-ந்தேதி விசாரணை

**புதுடில்லி, அக்.16:** வாக்காளர் பட்டியல் திருத்த வழக்கு, சுப்ரீம் கோர்ட்டில் வரும் 28-ந்தேதி விசாரணை நடைபெற உள்ளது.

டெல்லியில் நடந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தில் 47 லட்சத்துக்கு அதிகமானோர் நீக்கப்பட்டு இருந்தனர். இதில் விடுபட்டவர்கள் மீண்டும் தங்கள் பெயரை சேர்ப்பதற்கான காலக்கெடுவை இந்த மாதம் 30-ந்தேதி வரை தேர்தல் கமிஷன் நீட்டித்து உள்ளது.



முன்னதாக இந்த நடவடிக்கையின்போது சந்தேகத்துக்கு இடமான வாக்காளர்கள் என நோட்டீஸ் அனுப்பப்பட்டவர்களின் விவரங்களை பொதுவெளியில் வெளியிட தேர்தல் கமிஷனுக்கு உத்தரவிடுமாறு சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு இருந்தது. இந்த மனுவை 30-ந்தேதி விசாரிப்பதாக சுப்ரீம்கோர்ட்டு அறிவித்து இருந்தது.

ஆனால் விடுபட்டவர்களை சேர்ப்பதற்கான காலக்கெடு 30-ந்தேதியுடன் முடிவடைவதால், அதற்கு முன்னதாகவே இந்த வழக்கை விசாரிக்க வேண்டும் என சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி அமர்வில் மூத்த வக்கீல் பிரசாந்த் பூஷன் நேற்று ஆஜராகி வேண்டுகோள் விடுத்தார். இதை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், இந்த வழக்கை முன்கூட்டியே அதாவது 28-ந்தேதியே விசாரிப்பதாக தெரிவித்தனர்.

## லாஸ் ஏஞ்சல்ஸ் நகர மேயர் தேர்தலில் தமிழ்ப்பெண் நித்யா ராமன் முன்னிலை

**வாஷிங்டன், அக்.16:** கேரளாவில் 1981ம் ஆண்டு ஜூலை 28ம் தேதி ஒரு தமிழ் குடும்பத்தில் நித்யா ராமன் பிறந்தார். இவர் 6 வயதில் அமெரிக்காவுக்கு சென்றார். இவர் புகழ்பெற்ற ஹார்வர்ட் பல்கலைக்கழகம் மற்றும் மாசசூட்ஸ் தொழில்நுட்பக் கழகத்தில் பட்டம் பெற்றுள்ளார். 2020ம் ஆண்டில் லாஸ் ஏஞ்சல்ஸ் சிட்டி கவுன்சில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

2024ம் ஆண்டில் மீண்டும் கவுன்சிலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நித்யா ராமன், லாஸ் ஏஞ்சல்ஸ் நகரின் மேயர் தேர்தலில் முக்கிய போட்டியாளராக முன்னிலையில் உள்ளார்.

## உலகப்பொருளாதார வளர்ச்சியில்

# சீனா-அமெரிக்காவை முந்தும் இந்தியா

**புதுடில்லி, அக்.16:** உலகப்பொருளாதாரத்தின் வளர்ச்சி குறித்து சர்வதேச நாணய நிதியம் ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இதில் பொருளாதார வளர்ச்சியில் சீனா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளை இந்தியா முந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் என்பது உலகப் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும், நிதி நிலைத்தன்மையை மேம்படுத்தவும், உலகளாவிய வறுமையை ஒழிக்கவும் பாடுபடும் 191 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு சர்வதேச கடன் வழங்கும் அமைப்பாகும்.

உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, பணவீக்கம் மற்றும் நிதிச் சந்தைகளின் எதிர்கால நிலவரங்களை முன்கூட்டியே கணித்து சர்வதேச நாணய நிதியம் ஆண்டுக்கு இருமுறை 'உலகப் பொருளாதார அவுட்லுக்' அறிக்கையை வெளியிட்டு வருகிறது. தாய்லாந்து தலைநகர் பாங்காங்கில் இதற்கான மாநாடு நேற்று தொடங்கியது. அப்போது முறைப்படி இந்த ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது.

நடப்பு 2026-ம் ஆண்டுக்கான உலக பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை சர்வதேச நாணய நிதியம் 3.1 சதவீதமாக உயர்த்தியுள்ளது. இது கடந்த ஜூலை மாதம் கணிக்கப்பட்ட 3 சதவீத வளர்ச்சியை விட அதிகமாகும். அதேவேளையில், 2025-ம் ஆண்டின் 3.5 சதவீத பொருளாதார வளர்ச்சியை விட இது கணிசமாகக் குறைவு ஆகும்.

வரும் 2027-ம் ஆண்டில் உலகப் பொருளாதார வளர்ச்சி 3.4 சதவீதமாக மீண்டும் உயரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கணிப்புகள் அனைத்தும் நடப்பு ஆண்டில் கச்சா எண்ணெய் விலை சுமார் 41 சதவீதம் அதிகரித்து, சராசரியாக பேரலுக்கு 96 டாலராக உயரும் என்ற அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளன.

உலகளாவிய பணவீக்கம் 2026-ல் 4.7 சதவீதமாக இருக்கும் என்றும், அடுத்த ஆண்டில் அது 4.1 சதவீதமாகக் குறையும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஹார்முஸ் நீரிணை வழியாகச் செல்லும் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு போக்குவரத்து மார்ச் மாதத்திற்குள் மீண்டும் வழக்கம் போல் தொடங்கும் என்றும், செயற்கை நுண்ணறிவுக்கான (ஏ.ஐ.) உலகளாவிய தேவை சற்றே குறையும் என்றும் நம்பப்படுகிறது.

வேலைவாய்ப்பில் ஏ.ஐ.யின் தாக்கம் மெதுவாக நகரும் ஒரு சுனாமிபோல உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. உலகப் பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு குறிப்பிட்ட சில நாடுகளில் மட்டுமே குவிந்து வருவதாக அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி, உலகளாவிய ஒட்டுமொத்த வளர்ச்சியில் 95 சதவீத பங்களிப்பை வெறும் 32 நாடுகள் மட்டுமே வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.

இந்தியா மீண்டும் ஒருமுறை உலகின் மிக வேகமாக வளரும் முக்கிய பொருளாதாரமாகத் திகழும் என்று கணிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு பதிவான 7.7 சதவீதம் என்ற அதிரடி வளர்ச்சியை விட சற்றே குறைந்து, இந்த ஆண்டும் அடுத்த ஆண்டிலும் (2027) 7 சதவீதம் என்ற நிலையான வேகத்தில் இந்தியா வளர்ச்சியடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் உலகின் அதிவேகமாக வளரும் முக்கிய பொருளாதாரமாக இந்தியா தொடர்ந்து நீடிக்கிறது. இதேவேளையில், அமெரிக்கா மற்றும் சீனாவின் பொருளாதார வளர்ச்சி முறையே 2.3 சதவீதம் மற்றும் 4.5 சதவீத அளவில் இருக்கும் என சர்வதேச நாணய நிதியம் கணித்துள்ளது.

## கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.30 லட்சம் வரை

# நீண்ட காலக் கடன் பெற சிறப்பு முகாம்கள்

**சென்னை, அக்.16:** கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.30 லட்சம் வரை நீண்ட காலக் கடன் பெற சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்று- கூட்டுறவுத்துறை அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் ரூ.1.80 லட்சம் கோடி கடன் வழங்கும் இலக்கை எய்தும் வகையில், வாரந்தோறும் சிறப்புக் கடன் முகாம்கள் மற்றும் கடன் மேளா நடத்தப்பட்டு வருகின்றன. இதன்படி, ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமைகளில் சிங்கப் பெண்கள் கடன்கள் மற்றும் வீட்டு வசதிக் கடன்களுக்கான சிறப்பு முகாம்களும், வெள்ளிக்கிழமைகளில் இதர முன்னுரிமைத் துறைக் கடன் திட்டங்களுக்கான சிறப்பு முகாம்களும் நடத்தப்பட உள்ளன.

மேலும், கூட்டுறவுத்துறையின் சார்பில் ரூ.50 கோடி மதிப்பிலான நீண்ட காலக் கடன்களும் இச்சிறப்பு முகாம்களில் கூடுதலாக வழங்கப்பட உள்ளன.

இதில் வேளாண் இயந்திரமயமாக்கல், குளிர் பதங்கிடங்குகள் அமைத்தல், கால்நடை வளர்ப்பு மற்றும் அறுவடைக்கு பிந்தைய உட்கட்டமைப்பு வசதிகளுக்கான கடன்கள் வழங்கப்படும்.

தகுதியுடைய உறுப்பினருக்கு அதிகபட்சமாக ரூ.30 லட்சம் வரை நீண்ட காலக் கடன் வழங்கப்படும். பொதுமக்கள் உரிய ஆவணங்களுடன் பங்கேற்றுப்பயனடையலாம்.

விண்ணப்பத்துடன் புகைப்படங்கள், அடையாளச் சான்று, முகவரிச் சான்று, KYC ஆவணங்கள் மற்றும் நில அடமான ஆவணங்களைச் சமர்ப்பித்திட வேண்டும்.

இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திப் பொருளாதார மேம்பாடு அடையக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கூடுதல் விவரங்களுக்கு 9884000845 என்ற வாட்ஸ்அப் எண்ணைத் தொடர்பு கொள்ளலாம் எனக் கூட்டுறவுத்துறையின் சார்பில் தெரிவிக்கப்படுகிறது.






சிகரத்தின்

# தினத் தென்றல்

RNI: NO TNTAM/2013/55872 Postal R.No: TN/CC(S)DN/525/15-17

E.MAIL: dhinathendral@gmail.com Ph:044 - 79690504, 98400 83174




## கோவையில் பெரியார் நூலகத்தை இன்று

# முதலமைச்சர் விஜய் திறந்து வைக்கிறார்

**சென்னை, அக்.16:** கோவையில் பெரியார் நூலகத்தை முதலமைச்சர் விஜய் திறந்து வைக்கிறார். இதையொட்டி 2 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுகின்றனர். டிரோன்கள் பறக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கோவை காந்திபுரத்தில் சிறைத்துறைக்கு சொந்தமான இடத்தில் ரூ.300 கோடியில் பெரியார் அறிவுலகம் எனப்படும் பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையம் கட்டப்பட்டு உள்ளது. இதன் கட்டுமான பணிகள் நிறைவடைந்ததை தொடர்ந்து முதலமைச்சர் விஜய் நாளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கிறார். 1லட்சத்து 98 ஆயிரம் சதுர அடியில் தரைத்தளம் மற்றும் 7 தளங்களு டன் இந்த நூலகம் அமைந்து உள்ளது.

திறப்பு விழா இன்று நடைபெறுவதை முன்னிட்டு நூலகம் அழகுப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. நூலக வளாகத்தில் அழகிய புல்வெளிகள் அமைக்கப்பட்டு வருகின்றது. மேலும் கட்டிடம் முழுவதும் அலங்கார மின் விளக்குகளால் ஜொலிக்கிறது.

முதலமைச்சர் விஜய் இன்று சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவைக்கு காலை 11 மணிக்கு வருகிறார். அங்கு அவரை அமைச்சர்கள், கலெக்டர் மற்றும் அதிகாரிகள் புத்தகம் கொடுத்து வரவேற்கின்றனர். பின்னர் கோவை விமான நிலை யத்தில் இருந்து விழா நடைபெறும் இடத்திற்கு காரில் முதலமைச்சர் செல்கிறார். அங்கு காலை 11.45 மணிக்கு நூலக வளாகத்தில் அமைக்கப்பட்டு உள்ள பெரியார் சிலையை முதலமைசச்ர் திறந்து வைத்து, நூலகம் மற்றும் அறிவியல் மையத்தைபார்வையிடுகிறார்.

முதலமைச்சர் 12.20 மணிக்கு விழா நடைபெறும் மேடைக்கு வருகிறார். அனைவரையும் அமைச்சர் சம்பத்குமார் வரவேற்கிறார். பின்னர் முதலமைச்சர் விஜய் முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைக்கிறார். தொடர்ந்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதுடன், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார். முடிவில் கலெக்டர் பவன்குமார் நன்றி கூறுகிறார். இதனை தொடர்ந்து முதலமைச்சர் விஜய் காரில் புறப்பட்டு மதியம் 1.40 மணிக்கு கோவை விமான நிலையம் வந்தடைகிறார். அங்கிருந்து விமானம் மூலம் சென்னை செல்கிறார்.

திறப்பு விழாவை முன்னிட்டு பெரியார் நூலக வளாகத்தில் துப்பாக்கி ஏந்திய போலீசார் 24 மணி நேரமும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். அவினாசி ரோடு புதிய மேம்பாலத்தின் உப்பிலிபாளையத்தில் உள்ள ரவுண்டானாவில் புல்வெளி மற்றும் அலங்கார செடிகள் அமைத்து அழகுப்படுத்தப்படுகிறது.

முதலமைச்சரின் வருகையை முன்னிட்டு விமான நிலையம் முதல் பெரியார் நூலகம் வரையும் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் சுமார் 2 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இதுதவிர ஏற்கனவே உள்ள சிவப்பு மண்டல பகுதிகளுடன், அவினாசி ரோடு, காந்திபுரம், விழா நடைபெறும் இடம் உள்ளிட்ட பகுதிகளில் டிரோன்கள் பறக்க தடைவிதிக்கப்பட்டு உள்ளது.

# சூரி நடிக்கும் புதிய திரைப்படம்.. பூஜையுடன் தொடங்கிய படப்பிடிப்பு!

**சென்னை, அக்.16:** இப்படத்தின் தொடக்க விழா சென்னையில் நேற்று பிரம்மாண்டமாக நடைபெற்றது. விழாவில் நடிகர் சிவகார்த்திகேயன் கிளாப் போர்டு அடிக்க, 'மண்டாடி' படத்தின் தயாரிப்பாளர் எல்ரெட் குமார் கேமராவை இயக்கி படப்பிடிப்பைத் தொடங்கி வைத்தார்.

'வெண்ணிலா கபடிக்குழு' திரைப்படத்தின் மூலம் நகைச்சுவை நடிகராகப் பிரபலமானவர் சூரி. வெற்றிமாறன் இயக்கத்தில் வெளியான 'விடுதலை' திரைப்படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமான இவர், தொடர்ந்து 'கருடன்', 'கொட்டுக்காளி', 'மாமன்' உள்ளிட்ட படங்களில் நடித்தார். இவரது நடிப்பில் வெளியான பல திரைப்படங்கள் ரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்றன.

சமீபத்தில் மதிமாறன் இயக்கத்தில் சூரி நடித்த 'மண்டாடி' திரைப்படம் வெளியானது. கடலில் நடைபெறும் படகுப் போட்டியை மையமாகக் கொண்டு உருவான இப்படத்தில் மகிமா நம்பியார் உள்ளிட்டோர் நடித்திருந்தனர். இப்படத்தில் சூரியின் நடிப்பும் கவனம் பெற்றது. இதனைத் தொடர்ந்து, ரவிக்குமார் இயக்கத்தில் சூரி புதிய படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனத்தின் சார்பில் நவீன் யெர்னேனி, ஒய். ரவி சங்கர் ஆகியோர் இணைந்து இப்படத்தைத் தயாரிக்கின்றனர். சூரியின் ஏழாவது படமாக உருவாகும் இதற்கு தற்காலிகமாக 'சூரி 7' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

## 400 ஏழைக் குடும்பங்களுக்கு

# உதவிக்கரம் நீட்டிய ராஷ்மிகா மந்தனா!

**ஐதராபாத், அக்.16:** 'ரணபாலி' படத்தில் ஏற்ற ஜெயம்மா கதாபாத்திரத்தின் தாக்கத்தால், ஏழைக் குடும்பங்களுக்கு மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டத்தை முன்னெடுத்துள்ளார் நடிகை ராஷ்மிகா மந்தனா.






தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகர்களாக வலம் வருபவர்கள் விஜய் தேவரகொண்டா, ராஷ்மிகா மந்தனா. இவர்கள் ஏற்கெனவே 'கீதா கோவிந்தம்', 'டியர் காம்ரேட்' ஆகிய படங்களில் இணைந்து நடித்துள்ளனர். தற்போது மூன்றாவது முறையாக 'ரணபாலி' திரைப்படத்தில் இணைந்துள்ளனர்.

ராகுல் சங்கிரித்யன் இயக்கத்தில் உருவாகியுள்ள இப்படத்தில் விஜய் தேவரகொண்டா போராளி ரணபாலியாகவும், ராஷ்மிகா அவரது மனைவி ஜெயம்மாவாகவும் நடித்துள்ளனர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சென்னை மாகாணத்தில் ஏற்பட்ட பெரும் பஞ்சத்தின் பின்னணியில், உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு இப்படம் உருவாகியுள்ளது. மைத்ரி மூவி மேக்கர்ஸ் மற்றும் டி-சீரிஸ் நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கும் இப்படத்திற்கு அஜய் - அதுல் இசையமைத்துள்ளனர்.

400 குடும்பங்களுக்கு மளிகைப் பொருட்கள்

இந்நிலையில், 'ரணபாலி' படத்தில் தான் ஏற்று நடித்த ஜெயம்மா கதாபாத்திரம் அளித்த தாக்கத்தால், 400 ஏழைக் குடும்பங்களுக்கு உதவ ராஷ்மிகா மந்தனா முன்வந்துள்ளார்.

அதன்படி, 400 குடும்பங்களுக்கு மூன்று மாதங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்களை வழங்கியுள்ளார். அரிசி, கோதுமை மாவு, கேழ்வரகு உள்ளிட்ட 12 வகையான அத்தியாவசியப் பொருட்கள் இதில் இடம்பெற்றுள்ளன. மேலும், அடுத்த ஓராண்டுக்கு இந்த உதவித் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் குடும்பங்கள் அத்தியாவசியப் பொருட்களுக்காகச் செலவிடும் தொகையைச் சேமித்து, பிற தேவைகளுக்குப் பயன்படுத்த முடியும் என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

"சிறிய உதவியும் மாற்றத்தை ஏற்படுத்தும்"

தனது இந்த முயற்சி குறித்து ராஷ்மிகா மந்தனா கூறுகையில், "உதவி செய்வதற்குப் பெரிய தொகையோ, மிகப்பெரிய முயற்சியோ தேவையில்லை. சிறிய உதவிகூட ஒருவரின் வாழ்க்கையில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும். என்னுடைய இந்தச் செயல் மற்றவர்களுக்கும் உதவும் எண்ணத்தை ஏற்படுத்தினால் மகிழ்ச்சி அடைவேன்" என்று நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

திரைப்படத்தில் ஏற்ற கதாபாத்திரத்தின் தாக்கத்தால், நிஜ வாழ்க்கையிலும் ஏழைக் குடும்பங்களுக்கு உதவ முன்வந்துள்ள ராஷ்மிகா மந்தனின் இந்த முயற்சி கவனம் பெற்றுள்ளது.




Owned, Printer and Published by G.SASIREKA. Published from No:28, 2nd Avenue, Ashok Nagar, Chennai-83 Printing at Annai Abirami Achagam, No. 24, Vengu Chetty Street, Punga Nagar, Chennai - 600 003. Editor: S.SENTHILKUMAR, Office: No:9, 4th Block, Veeramamunivar Street, Mogappair East, Chennai - 37.